# சாளரம்

ஆகஸ்ட் 1991 விலை : 12 ரூபா

தெணியான்



* இளையோர் திங்கள் இதழ்

## சாளரம்

தொடர்பு முகவரிகள்


அலுவலகம்:-

**சாளரம்**
வேம்படி வீதி
யாழ்ப்பாணம்.

**அ. முருகேசு**
றோ. க த. க பாடசாலை
புதுக்குடியிருப்பு

**அ. கௌரீகாந்தன்**
கிருஷ்ணபுரம்,
கிளிநொச்சி.


**போட்டிகள்**

சாளரத்தில் வெளியாகும் சகல போட்டிகளுக்குமுரிய விடைகள் யாவும் வெளியான இதழுக்கு அடுத்த மாதம் 15 ம் திகதிக்கு முன்னர் சாளரத்திற்கு கிடைக்கக்கூடியதாகஅனுப்பி வைத்தல் வேண்டும்.

## உள்ளே.....


- அவசியமான கட்டுப்பாடு
- படைப்பும் பார்வையும்
- மறைக்கப்பட்ட வரலாறு
- பிரான்சியப் புரட்சியின் பொருளாதாரப் பின்னணி
- ஓர் முன்னுதாரணம்
- நிலாமுற்றம்
- ஓசோன் படையில் ஒருதுவாரம்
- தமிழர் பாரம்பரிய கல்வி நிறுவனங்கள்
- தெறிப்பு
- மாணவர் செய்தவை
- ஆசிரிய தலையங்கம்
- ஆனையிறவு ......
- உருவகக்கதை
- நுண்ணறிவுப் போட்டி
- குறுக்கெழுத்துப் போட்டி
- ஓவிய வாக்கியப் போட்டி

தெணியான்



# அவசியமான கட்டுப்பாடு

தனியார் கல்வி நிலைய ஒன்றியத்தின் அனுசரணையுடன் தனி முறைக் கல்வி நிலையங்களின் (ரியுசன் சென்ரர்) செயற்பாடுகள் சம்பந்தமான சில ஒழுங்குகளை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கல்விப்பிரிவு அறிவித்துள்ளது. 01-07-91ல் இருந்து இவ் ஒழுங்குகள் நடைமுறைக்கு வரும் எனவும் தெரியப்படுத்தப் பட்டுள்ளது.

பாடசாலைகள் முறையாக செயற்படுமானால் தனிமுறைக் கல்விக்கான அவசியமே ஏற்படாது. பாடசாலைகளை சரியான முறையில் செயற்படுத்துவதற்கு முயற்சிப்பதே இங்கு முக்கியமானது. இது ஒரு கடினமானதும், அரசியல் அதிகாரத்துடனும் தொடர்பு பட்டதுமான விடயமாகும். ஆகவே இது அரசியல் அதிகாரப் பிரச்சனை தீர்க்கப்படும் வரை ஏற்ற இறக்கத்துடனேயே நடந்தேறும். பாடசாலைகளின் நிலையை திருத்தி அமைப்பதில் தமது ஆர்வத்தைக் காட்டுவதற்குப் பதிலாக சில ஆசிரியர்கள் அப் பலவீனத்தை தமக்கு சாதகமாக பயன்படுத்தி தமது சொந்த உழைப்பைப் பெருக்கிக் கொள்ளப் பார்க்கிறார்கள். பாடசாலைகளை மேலும் பலவீனப்படுத்தவும் செய்கிறார்கள். தனிமுறைக் கல்விப் போதனையிலேயே அதிக கவனம் செலுத்துகிறார்கள். இவர்களில் பலர் பாடசாலைகளுக்குச் செல்வதேயில்லை. பாடசாலையும் இலவசக் கல்வி முறையும் கேலிக்கிடமானதாகின்றது.

பாடசாலைகளில் கற்பிக்கப்படாத பாடநெறிகளைப் போதிப்பதற்கு தனியார் கல்வி நிறுவனங்கள் அவசியம். அதேபோல் பாடசாலைப் பாடநெறிகளை பாடசாலைக்குச் செல்லாது படிக்க முற்படும் மாணவர்களுக்கான தனியார் கல்வி நிறுவனங்களும் அவசியமானவை.

ஆனால் பாடசாலைகளில் கற்பிக்கப்படும் பாட நெறிகளை, பாடசாலைகளில் கற்கும் மாணவர்களுக்கு பாடசாலைக்கு வெளியில் வைத்து தனிமுறைப் போதனையாக கற்பிக்கும் நிலை நிச்சயமாக அவசியமற்றது. அதுவும் பாடசாலை ஆசிரியர் அதே பாட பாடசாலை மாணவர்க்கு தான் கற்பிக்கும் அதே பாடநெறியை தனிமுறைப் போதனையாக கற்பிக்கும் முறை அவசியமானதா?

முன்கூறிய கட்டுப்பாட்டின் 3வது பந்தி பின்வருமாறு கூறுகிறது. ஆசிரியர் பாடசாலை கடமை நேரங்களில் தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் செல்லாமை.

பாடசாலையின் நிலையை அபிவிருத்தி செய்வதற்கு இக் கட்டுப்பாடு நல்ல பங்காற்றப் போவது நிச்சயம். இக்கட்டுப்பாடு கல்வி ஆர்வலர்களினதும், மாணவர்களினதும் மிகப் பல ஆசிரியர்களினதும் அவாவை பிரதிபலிப்பதாய் உள்ளது.

சிறிலங்கா அரசாங்கமும் இவ் விதவொரு கட்டுப்பாட்டை பல வருடங்களுக்கு முன்னர் கொண்டு வந்தது. ஆனால் அது அமுல் நடத்தப்படவில்லை. ஏராளமான நடைமுறைப் பிரச்சனைகளைக் காரணம்காட்டி இக்கட்டுப்பாடு நடைமுறையில் கைவிடப்பட்டு விட்டது.

கொள்கைப் பிடிப்பும், நடைமுறைச் செயற்திறனும் மிக்க விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி இது விடயத்தில் மிக கண்டிப்பாக இருக்க வேண்டும் என்பதே கல்வி ஆர்வலர்களின் அவாவாகும்.

குறிப்பு; ரியுஷன் (Tution), ரியூட்ஸ் (Tutes), ரியுரர் (Tutor), ரியுரோறியல் (Tutorial) ரியுஷன் சென்ரர் (Tution Centre) என்பவை எல்லாம் தனிமுறைப் பயிற்சி, தனிமுறைக் கல்வி, தனிமுறைப் போதனை ஆகியன தொடர்பான விடயங்களாகும். வழமையான கல்விப் போதனை முறைக்கு மேலதிகமானதே இந்த தனிமுறைப் போதனையாகும்.

வழமையான கல்வி போதனை முறையை வழங்கும் நிலையங்களே 'கல்வி போதனை நிலையங்கள்' என அழைக்கப்படுகிறது. அக்கல்வி நிறுவனம் எப் பிரிவுக்கு சொந்தமானதாய் உள்ளதோ அப்பிரிவின் பெயரை முன்நிறுத்தி அக்கல்வி நிறுவனம் அழைக்கப் படுகிறது. மத நிறுவன கல்வி நிலையங்கள், அரசாங்க (பொது) கல்வி நிலையங்கள், தனியார் கல்வி நிலையங்கள் என்பன உதாரணங்களாகும். ஒரு பொதுநிலை அளவாக அல்லது பொதுமாதிரியாக (Norm) அங்கீகரிக்கப்பட்ட கல்விப் போதனா முறைக்கு புறம்பாக அல்லது விசேடமாக நடாத்தப்படும் கல்விப் போதனையே தனிமுறைப் போதனை (டியுஷன் Tution) எனப்படும். தனிமுறை போதனாசிரியர் (ரியுட்டர்) என்பவர் ஆசிரியர் (ரீச்சர்) என்பவரில் இருந்து வேறுபட்டவர்.

— இரத்தினம்


# படைப்பும் பார்வையும்

வன்னியின் ஒரு ஒதுக்குப்புறமான ஓர் மூலையில் எந்தவித அடிப்படைவசதியும் அற்ற ஒரு கிராமத்தில் பிறந்து வளர்ந்தவன் தான் இளந்திரையன். இப்பொழுது அவன் 9-ம் வகுப்பு படித்துக்கொண்டிருக்கிறான். படிப்பதற்காக மகாவித்தியாலயத்திற்கு தினமும் மூன்று மைல்கள் அவன் நடக்கவேண்டி இருந்தது. அவனது தாய்தந்தையரை வறுமையென்ற கொடுமை வாட்டியது இருந்தபோதும் தன்பிள்ளையை ஒரு குறிப்பிட்ட வகுப்பு வரையாவது படிப்பிக்கவேண்டும் என்ற ஆசையில் வாயைக்கட்டி, வயிற்றைக்கட்டி தேவையானவற்றை வாங்கிக்கொடுத்தனர்.

இளந்திரையன் அப்பா அம்மாவின் உணர்வுகளை சரியாகப்புரிந்துகொண்டு கல்வியை மிகவும் அக்கறையாகப் படித்துவந்தான். ஒவ்வொரு ஆண்டுகளிலும் நடைபெறும் பரீட்சைகளில் எல்லாப்பாடங்களிலும் 50 புள்ளிகளுக்குக் குறைவதில்லை. ஆனால் ஓர் பாடத்தில் மட்டும் எல்லாமாணவர்களையும் விட அதிகமாகப் புள்ளிகளைப் பெற்றுவந்தான். இந்தப்பாடத்திற்குஆரம்பத்தில் யாரும் அவனுக்கு குருவாக இருந்ததில்லை.

அவனுக்கு இயற்கையில் மிகுந்த ஈடுபாடு. இயற்கை அழகுகளை மிகவும் ரசிப்பான். பாடசாலைக்கு வருகின்ற அந்தக்காட்டுப்பாதைகளில் விளையாடி விளையாடி ஒவ்வொன்றையும் உன்னிப்பாக கவனித்து வருவான். சிலவேளை தன்னையும் மறந்து இயற்கையோடு ஒன்றி இருப்பான். அவற்றை மிகவும் அழகாக மனதில் பதித்துக்கொள்வான். அதுபோன்று பாடப்புத்தகங்களில் உள்ள படங்களையும் மிகவும் ரசிப்பான். அவற்றைப் படமாகவரையவேண்டுமென்ற ஆசையில் தன் மனதில் பதிந்தவற்றைப் படமாக வரைந்து ரசிப்பான்.

அவனுக்கு பலநாட்களாக ஒரு ஏக்கம் நல்ல ஒரு ஓவிய ஆசிரியரைச் சந்திக்கவேண்டும் என்பதுதான். அந்த ஆசை நீண்டநாட்களாக நிறைவேறவில்லை. இந்த நிலையில் இருந்தபோதுதான் அவன் படிக்கும் அப்பாடசாலைக்கு ஓர் ஓவிய ஆசிரியர் நியமிக்கப்பட்டார். அது அவனுக்கு ஓர் அதிஸ்டம் கிடைத்ததுபோன்ற ஓர் உணர்வை உண்டுபண்ணியது. மறுநாளே அந்த ஆசிரியரைச் சந்திக்கவேண்டும் என்ற ஆசை அவன் மனதைத் தூண்டியது. ஆனால் பலநாட்களின் பின்பே அந்த வாய்ப்பு அவனுக்கு கிட்டியது. முன்பு அவன் வரைந்த ஓவியங்களை ஆசிரியருக்குக் காட்டினான். ஆசிரியர்களின் உதவி எதுவும் இன்றி அவனால் வரையப்பட்ட ஓவியத்தைப் பார்த்து உனக்கு நல்ல எதிர்காலம் இருக்கின்றது என அவனது முதுகைத்தட்டி உற்சாகப்படுத்தினார் ஆசிரியர்.



நேரமுள்ளபோது வந்து தன்னிடம் படிக்கும் படியும் கூறினார். ஆசிரியரின் முயற்சியும். ஒத்துழைப்பும், இவனது தீவிர ஓவியப் பற்றும் நல்ல ஓவியங்களை படைக்கக்கூடிய ஆற்றலை வளர்த்தது.

ஆனால் இவனது சக மாணவர்களோ ஓவியப் பயித்தியக்காரனாகவேஇவனைப் பார்த்தனர். இவனது படங்களைப் பார்த்து ஏளனமாகச் சிரிப்பர். ஒருதடவை இவன்பாடசாலையில் ஓர் யானையின் படத்தை வரைந்து தனது சக மாணவனிடம் காட்டினான். அவர்கள் நன்றாக இருக்கிறது என்றுகூறி ஒருவரை ஒருவர்பார்த்து எக்காளமிட்டுசிரித்தனர். ஒருவன் எழுந்து ‘‘என்ன இதில் வரைந்துள்ளாய்’’ எனக் கேட்டான். இவன் யானையெனப் பதிலளித்தான். ‘‘நல்லாயிருக்குது கீழே யானை என்று எழுதினால்’’ எல்லோருக்கும் விளங்கும் என்றுசொல்லி மற்ற மாணவர்களைப் பார்த்தான். சிரிப்பொலி அடங்குவதற்கு சில நிமிடங்கள் சென்றன.

இப்படி எத்தனையோ தடவை அவன் உள்ளம் புண்பட்டிருக்கும். அப்போதுகூட அவன் நம்பிக்கை குறையாது. ஒருநாளாவது இவர்கள் வியப்படைய ஓவியம் வரைவேன் என மனதிற்குள் சபதமெடுத்துக்கொண்டான்.

இந்த நிலையில்தான் அவனது பாடசாலையில் ஓவியக் கண்காட்சி ஒன்று நடந்தது. யார் மூலமோ தனது ஓர் ஓவியத்தையும் கண்காட்சியில் இடம்பெற செய்துவிட்டான். அந்த ஓவியத்தின்கீழ் தனது குருவின் பெயரைப் போட்டுவிட்டான். அந்த நாளில் ஓவிய ஆசிரியர் அங்கில்லை என்பது அவனுக்குத் தெரியும்.

எல்லா மாணவர்களுடன் அவனும் கண்காட்சி பார்க்கச்சென்றிருந்தான். எல்லோருடைய கண்களும் அந்த ஓவியத்தின்பக்கம் இழுக்கப்பட்டது. அருமையாக தத்ரூபமாக இயற்கை எழிலை படைத்திருக்கின்றார் ஆசிரியர் என பாராட்டினர். சக ஆசிரியர்கள்கூட அந்த ஓவியத்தினைப் பெருமையாக பேசினர். சில மாணவர்கள் இளந்திரையனை லேசாக திரும்பிப்பார்த்து' ''இதுதான் ஓவியம் என்று சொல்வது நீ கீறுவதற்கு வேறு ஏதாவது பெயர்தான் வைக்கவேண்டும்'' என்று சொல்லிச் சிரித்தனர்.

அப்போதும் இளந்திரையனின் மனம் ஒரு புறம் மகிழ்ச்சியாலும், ஒருபுறம் வேதனையாலும் துடித்துக்கொண்டிருந்தது, நான்தான் இதை வரைந்தது என்று வாய்விட்டு சொல்லவேண்டும் என மனம் துடித்தது. மனதை அடக்கிக்கொண்டான். தான் என்று சொன்னால் இவர்கள் நம்பமாட்டார்கள் என்று தானோ தெரியவில்லை.

அன்று புதன்கிழமை பாடசாலையில் எல்லாமாணவர்களும், ஆசிரியர்களும் பலத்த பாராட்டு: ஓவியம் எல்லோரையும் கவர்ந்துவிட்டதென மெச்சினார்கள். ஆசிரியருக்கு எல்லாமே புதிராக இருந்தது. ஒருதரம் இளந்திரையனை திரும்பிப் பார்த்தார், அவனது முகத்தைப் பார்த்ததும் எல்லாமே புரிந்துவிட்டது.

பாடசாலை இடைவேளையில் ஓவிய ஆசிரியரைச் சந்தித்து நடந்தவற்றை விபரமாக சொன்னான் தன்னை மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டான். தன்னுடைய பெயரில் இவ் ஓவியத்தை வைத்திருந்தால் இவ்வளவு பாராட்டுதலைப்பெற்றிருக்காது, அத்தோடு இப்படத்தை தன்பெயரில் வைப்பதற்கும் அனுமதி கிடைத்திருக்காது என்றும் சொன்னபோது அவன் கண்களிலிருந்து கண்ணீர் திரையிட்டது.

அடுத்தநாள் ஓவியப் பாடநேரத்தில் ''கண்காட்சியில் வைக்கப்பட்ட ஓவியம் என்னுடையதல்ல. என் பெயரில் வைக்கப்பட்டது இளந்திரையனின் ஓவியம்'' இவ்வாறு எனது ஏற்புதல் இல்லாது எனது பெயரைப் பயன்படுத்தியது தண்டிக்கப்படவேண்டியதுதான் ஆனால் இதற்கு பின்னால் உள்ள உண்மைகளை உங்களுக்கு சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன்.'' என்று தொடர்ந்தார்.

''எங்கள் எல்லோருக்கும் ஒரு கெட்ட பழக்கம் உண்டு. நன்கு தெரிந்த ஓவியன், எழுத்தாளன், பேச்சாளன் ஆகியோரின் படைப்புக்களை கண்ணை மூடிக்கொண்டே நன்றென மனதில் பதித்துக்கொள்வோம். மனதில் அவர்களைப்பற்றி உயர்ந்த மதிப்பு வைத்துக்கொண்டு அவர்களுடைய படைப்புக்களைப் பார்க்கின்றபோது அவை எமக்கு நன்றாகவே தெரியும். இது எமது சமூகத்தில் உள்ள பெரிய குறைபாடு. இலைமறைகாயாக எத்தனையோ ஓவியர்கள், எழுத்தாளர்கள், இலக்கிய படைப்பாளிகள் இருக்கிறார்கள், எங்களுடைய சமூகப் பார்வையாலும், உதாசீனத்தாலும் முகமன் பார்க்கும் உணர்வாலும் கட்டுண்டு இருப்பதால் இந்த கலைஞர்கள் இவற்றுக்கெதிராக எதிர் நீச்சல்போட்டு முன்வரமுடியவில்லை. பொருளாதார வசதியுமில்லை. சாதாரணமாணவர்களாலும் அசாதாரண படைப்புக்களை படைக்க முடியும். இதற்கு இளந்திரையன் ஒருநல்ல உதாரணம்.

தெரிந்தவன் தெரியாதவன் என்ற தன்மைகளை மறந்து ஒவ்வொரு கலைகளையும் கலையுணர்வோடு பாருங்கள்'' என்ற ஆசிரியரின் வார்த்தைகேட்டு எல்லா மாணவர்களும் தங்கள் தவறைப் புரிந்துகொண்டதுபோல் தலையை குனிந்து கொண்டனர். அங்கே இளந்திரையனின் தலைமட்டும் நிமிர்ந்து நின்றது.

''உனக்கு என்னைவிட சிறந்த ஓவியங்கள் படைக்கும் ஆற்றல் இருக்கிறது'' என தான் ஒரு குருவென்பதையும் மறந்து ஆசிரியர் சொன்னபோது இளந்திரையனின் மனம் ஆசிரியரின் பெரும் தன்மையைநினைத்து பூரித்துக்கொண்டது.

**ஜெசி**

## தெரிந்துகொள்ளுங்கள்

- ஆரியர் எங்கிருந்து வந்தவர்கள்?
  திபெத் அல்லது மத்திய ஆசியா.
- பிரெஞ்சுப் புரட்சியின் முக்கியஸ்தர் யார்?
  நெப்போலியன் போனபாட்.
- உலகிலேயே பெரிய கட்டடம் எது?
  சிக்காக்கோவின் சியஸ் கட்டடம்.
- கலப்புப்பொருளாதாரம் என்றால் என்ன?
  பொது மற்றும் தனியார் துறைக்கு சமவாய்ப்பு அளிப்பது.
- உலகின் விட்டம் எவ்வளவு?
  7926 மைல்கள்.

# மமதைச் செருக்கும் தலைகுனிவும்

## ( வரலாறு ஆண்டு — 9 ஒரு பார்வை )

இந்நூல் சிங்களத்தில் எழுதப்பட்டு தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இலங்கையில் உள்ள அனைத்துப் பிரிவு மக்களுக்கும் ஒரே நூல் படைக்கப்பட்டுள்ளது. அரசாங்கம் தான் பாரபட்சம் இன்றி நடப்பதாக காட்டிக் கொள்கிறது.

## மறைக்கப்பட்ட வரலாறு

'ஆரம்ப காலத்தில் இருந்து போர்த்துக்கேயர் வந்தகாலம் வரை' உள்ள வரலாற்றைக் கூறுவதே இந்நூலின் நோக்கமாகும். முகவுரையில் ஆணையாளர் பின்வருமாறு கூறுகிறார் ...... ''மேலும், இன்று சிங்களவர், தமிழர், சோனகர் என நாம் வேறுபட்டுள்ளோமாயினும், மிகப் பழைய காலத்தில் இருந்தே நாம் ஒன்று சேர்ந்து இலங்கை மக்களாக வாழ்ந்து வருகின்றோம் என்பதை இந்நூல் சிறிதாயினும் மாணவருக்கு விளங்க வைக்கும்.''

முன்னுரையில் இவ்விதம் கூறப்பட்டாலும் நூலில் உள்ளதோ வேறுவிடயமாகவே உள்ளது. இலங்கையின் வரலாறு என்பது பௌத்த சிங்களவர்களின் வரலாறேயாகும் என்பதை அனைவருக்கும் கூறுவதே நூலின் நோக்கமாய் உள்ளது. சிங்கள மாணவர் தவிர்ந்த ஏனையமாணவர் அனைவரும் தமது மூதாதையரின் வரலாற்றை மறந்து விடவேண்டும் என்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும். எவ்வளவிற்கு முடியுமோ அவ்வளவிற்கு சிங்களவர்களின் வரலாறு மாத்திரமே கூறப்படுகிறது.

வரலாறு என்று கூறவரும்போது அனைத்துப் பாட நூல்களிலும் ஒரே விடயமே திரும்பத் திரும்ப கூறப்பட்டுள்ளது. அவை பின்வருவனவாகும்;

1) ஆரம்ப நாள் முதலே இலங்கை என்ற ஒரு முழுநாடு இருந்ததாக கூறல்.

2) ஆரியரின் வருகையுடன்தான் இந்த இலங்கையின் நாகரிகம் ஆரம்பமானது.

3) திராவிடர்களும் (தமிழர்களும்) இலங்கையர்களும் (சிங்களவர்கள்) தொடர்ச்சியாக பகைவர்களாகவே இருந்து வந்துள்ளார்கள்.

4) இலங்கையின் நாகரிகம் என்பது அநுராதபுரத்தில் (ராஜரட்டை) ஆரம்பித்து கோட்டையில் (மாயரட்டை) போய் முடிகிறது.

5) இலங்கையின் நாகரிகம் என்பது பௌத்த மதத்துடன் ஆரம்பித்து பௌத்த மதத்தாலேயே வளர்க்கப்பட்டது. ஏனைய மதங்களுக்கு இது விடயத்தில் எந்த பங்களிப்பும் இருக்கவில்லை.

6) மொழி சம்பந்தமான வரலாற்றைப் பொறுத்தவரை சிங்களம் ஒரு இந்தோ ஆரிய மொழி என்பதை வலியுறுத்தல். ஏனைய மொழிகளின் வளர்ச்சிபற்றி மௌனம் சாதித்தல்.

இப்பாட நூல்கள் எதற்காக இவ்விதம் ஒரே விடயத்தை திரும்பத் திரும்ப வலியுறுத்துகின்றன? நோக்கம் இல்லாமல் இல்லை.

தென் இந்தியா (தக்கணம்) அதிலும் குறிப்பாக தமிழ்நாடு தவிர்ந்த ஏனைய இந்திய உபகண்ட நாடுகள் அனைத்தும் ஆரிய ஆதிக்கத்துள்ளாகியே இருந்தது. தமிழ்நாடு கூட கணிசமான காலம் ஆரிய செல்வாக்கிற்கு உள்ளாகியே இருந்தது. இதனால் ஆரியர் என்போர் உயர் குலத்தவர் என்ற கருத்தே எங்கும் பரவியிருந்தது. தென் இந்தியாவில்

உயர் குலத்தவராக இருந்த பிராமணியர்கள் ஆரிய மொழியான சங்கதத்தை (சமஸ்கிரதம்) நன்கு கற்றவர்களாக இருந்ததுடன், தாம் திராவிடர் எனக்கூறிக் கொள்வதைவிரும்பாத வர்களாகவும் இருந்தார்கள்.

இதேபோன்றோர் நிலையே ராஜரட்டை உயர் குலத்தோரிடையேயும் நிலவியிருக்க கூடும். அவர்கள் தம்மை இலங்கையின் சுதேசிய மக்களிடம் இருந்து பிரித்தும், உயர்த்தியும் காட்டிக்கொள்ள விரும்பியதன் விளைவே இந்த ஆரிய மோகமாகும்.

ஆரியர் உயர்ந்தோர் என்ற எண்ணக்கரு தவறானது. அது ஓர் இனவாத எண்ணக்கரு. சிங்களவர்கள் ஆரிய வழித்தோன்றலர் என்ற கருத்து வரலாற்று உண்மைக்குப் புறம்பானது. சிங்களவர்கள் ஏனைய இலங்கையரிலும் விட உயர்ந்தவர்கள் என்ற மமதைச் செருக்கை ஏற்படுத்துவதும், ஏனையோரிடம் தாம் தாழ்ந்தவர்கள் என்ற தலைகுனிவு உணர்வை வளர்ப்பதுவுமே 'வரலாறு ஆண்டு - 9' நூலின் நோக்கமாகும்.

— வாமணன்

## இனவாதத்தைத் தூண்டும் பொய்மை வரலாறு

பல சிங்களப் புத்திஜீவிகளும் பொதுவாகச் சிங்களமக்களும் தம்மை இன்று ஆரிய இனத்தவர் என்று கூறிக்கொள்கின்றனர். கி. மு. 5-ம் நூற்றாண்டில் இலங்கைக்கு வந்த விஜயனே இத்தீவின் முதல் மனிதன் என்றும், அவன் ஓர் ஆரியன் என்றும் அவனிலிருந்து சிங்கள இனம் தோன்றியதென்றும் ஒரு பிழையான இனவாத வரலாற்றுக் கோட்பாட்டை உருவாக்கி வளர்த்து வருகின்றனர். ஆனால் உண்மை அதுவல்ல.

புனையப்படும் விஜயன் வருகைக்கும் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே இத்தீவில் மக்கள் வாழ்ந்துள்ளதற்கான தொல்பொருள் ஆதாரங்கள் கிடைத்துள்ளன. அதன்படி திராவிடமக்கள் இலங்கைத் தீவில் வாழ்ந்துள்ளதாக ஐயந்திரிபறக் கண்டறியப்பட்டுள்ளது. நேர்மையுள்ள பல சிங்கள ஆராய்ச்சியாளர்கள் இதனை ஒப்புக்கொண்டும், எழுதியும் உள்ளனர். இவ்வாறுனவர்களுள் தெரணியாகல, சேனகபண்டார, சுதந்த குணதிலக போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

கி. மு. 1000 ஆண்டுகளுக்குமுன்பு இலங்கையில் பெருங்கற்காலப் பண்பாட்டைக்கொண்ட மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை தொல்பொருள் ஆய்வுகள் நிரூபிக்கின்றன. இலங்கையிலும், தென்னிந்தியாவிலும் இக்காலப்பகுதியில் ஒத்தபண்பாட்டையுடைய மக்கள் வாழ்ந்துள்ளனர்.

இம்மக்கள் பிரிவிலிருந்தே காலகதியில் இருபண்பாட்டு கூறுகள் தோன்றின. ஒன்று சிங்களவர், மற்றது தமிழர். தென்னிந்தியாவில் மூலத்திராவிடத்திலிருந்து தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்பன தோன்றியதுபோலவே, இலங்கையில் ஈழத்தமிழ், சிங்களம் என்பன தோன்றின. பௌத்த மதத்தின் வருகையுடன் பாலிமொழி, வடமொழிக்கலப்பு என்பனவற்றால் சிங்களமக்கள் மத்தியில் ஒருவகை மொழிக்கலப்பும் ஓரளவு ஆரிய மயமாக்கலும் இடம்பெற்றன. ஆரிய மயமாக்கம் என்பது ஆரியஇனம் என்பதைக் குறிக்காது. அதாவது இலங்கைக்கு ஐரோப்பியர்கள் வந்தார்கள். அவர்கள் இங்கு குடியேறவில்லை. ஆனால் ஓரளவு ஐரோப்பியமயமாக்கல் இடம்பெற்றுள்ளது. ஐரோப்பியரின் உடுபிடவை முறைகள், சாப்பாட்டுவகைகள், நிர்வாக அரசியல் முறைமைகள் இங்கு பரவியுள்ளபோதும் எம்மை ஐரோப்பியர் என்று நாம் சொல்லிக்கொள்வதில்லையல்லவா? அதேபோல சிங்களமக்கள் மத்தியிலும் ஆரியமயமாக்கல் இடம்பெற்றதே தவிர அவர்கள் ஆரியர்கள் அல்ல, அவர்களது மூலம் திராவிடத்தைச் சேர்ந்தது.

தமிழருக்கு எதிரான ஒடுக்குமுறையை வளர்ப்பதற்கு சிங்களவருக்கு ஒரு பிழையான வரலாறு போதிக்கப்பட்டு இனவாதவெறியூட்டப்படுகிறது. எனவே உண்மையில் ஒடுக்குமுறைக்கான இந்த இனவாத வெறி அறிவியலை முழுமையாக நிராகரித்து அவர்களது உண்மையான வரலாறும் ஒடுக்கப்படும் மக்களாகிய எமது வரலாறும், எமது வரலாற்று உணர்வும் எம்மிடம் பெரிதும் வளர்வது அவசியம்.

— சாரணன் —

# பிரான்சியப் புரட்சியின் பொருளாதாரப் பின்னணி

ஆரம்ப காலத்திலிருந்தே பெரும்பாலான நாடுகளில் மன்னர் ஆட்சியாலும், பிரபுக்கள் ஆதிக்கத்தாலும், மேல் வர்க்கங்களின் அழுத்தங்களாலும் தாங்க முடியாத அடக்குமுறைகளுக்கும், சுரண்டல்களுக்கும் உட்பட்டு எந்தவித உரிமைகளும் அற்ற அடிமைகளாகவே மக்கள் வாழ்ந்தனர். தம் உரிமைகளையும், தம்மையும் பாதுகாக்க வழிதெரியாது திகைத்து நின்றனர். கொடுமைகளை எதிர்க்கத் தயங்கினர். அதனால் துன்பங்களும், துயரங்களும் மேலும் பெருகின. நிலப்பிரபுத்துவ கால பிரான்ஸ் இதற்கு விதிவிலக்கல்ல.

14ம், 15ம் லூயி மன்னன் காலத்திலேயே பிரான்ஸ் கடனாளியாக இருந்தது. 16ம் லூயி மன்னன் களியாட்டங்களிலும், வேட்டையாடுவதிலும், பெரும் பொழுதைக் கழித்தான். நாடு வறுமையில் இருக்கின்றபோது தனது உல்லாச வாழ்வுக்காக அவனும் அவனது மனைவியும் கோடிக்கணக்கான செலவில் உல்லாச விடுதிகளை அமைத்தனர் தமது சொந்தத் தேவைக்கென ஆயிரக்கணக்கான குதிரை லயங்களையும், அதைப் பராமரிக்க ஆயிரக்கணக்கான தொழிலாளர்களையும் வைத்திருந்தனர். இத்தனையும் அவன் வேட்டையாடுவதற்காகவே பயன்படுத்தப்பட்டன.

இவனது பொறுப்பற்ற செயற்பாட்டால் மேலும் கடன்கள் வளர்ந்தன. இந்த கடன்களை கட்டுவதற்காக மக்களிடமிருந்து வரிகளை அறவிட்டான். கொடுமையான முறையில் வரிகள் வசூலிக்கப்பட்டன. ஒரு வருட வருமானத்தில் 35 வீதமானது வரியாக அரசுக்கு செலுத்தவேண்டியிருந்தது. எஞ்சிய பணத்தில் பிரபுக்களின் காணிகளுக்கு குத்தகையாக பெரும் பகுதியை கொடுக்கவேண்டியிருந்தது. இதனால் மக்கள் உற்பத்தியில் ஈடுபட முடியாதுபோய் பஞ்சம் பெருகியது.

சாதாரண ஒரு ரொட்டி சுடுவதிலிருந்து இறந்த ஓர் உடலைக் கொண்டுபோகக்கூட மக்கள் வரி செலுத்தவேண்டிய கட்டாயமிருந்தது. தேவாலயங்களுக்கு உற்பத்தியில் ஒரு பகுதி இலவசமாகக் கொடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டது. இதுபோன்றே ஏனைய அனைத்து நிர்வாகங்களும் ஊழல் நிறைந்ததாகவும் ஒழுக்கமற்றதாகவும் இருந்தது. இந்த நிர்வாகத்திலிருந்த அனைவருமே பிரபுக்களாகவே இருந்தனர். இக் கொடுமைகளைப் பற்றி விமர்சித்தவர்கள், வரிகட்ட மறுத்தவர்கள், உண்மைகளை உபதேசித்தவர்கள், இக் கொடுமைகளை எதிர்த்தவர்கள் ஆகியோர் கேட்டுக்கேள்வியின்றி கைகள் உடைக்கப்பட்டு காதுகள் அறுக்கப்பட்டு பலத்தசித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டனர்.

ஆனால், நிலப்பிரபுக்களுக்கும், பிஷப்புக்களுக்கும் வரிச்சலுகை கொடுக்கப்பட்டது. உயர்ந்த மதிப்புக் கொடுக்கப்பட்டு சகல இன்பங்களையும் அனுபவித்துக் கொண்டிருந்தனர்.

வரிக்கொடுமையால் உழைப்பின் பெரும்பகுதியை இழந்த மக்கள் உழைத்தும் பசிக் கொடுமையால் பட்டினியால் வாடவேண்டியிருந்தது.

இதனால் மக்கள் உற்பத்தியில் ஈடுபடமுடியாது போய் பஞ்சம் பெருகியது.

டியாக்கர் நகரில் பசியால் ஆர்ப்பாட்டம் செய்த மக்கள் ரொட்டி கொடுங்கள் என்ற கோசங்களைமுன் வைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது சில அதிகாரிகள் "புல் தரைகளைக்காட்டி நல்ல புல் இருக்கிறது அதை அரிந்து சாப்பிடுங்கள்" என்று திமிர்த்தனமான பதிலைக் கூறினர். இதே நாட்டு மன்னன்தான் றொட்டி இல்லையா கேக் சாப்பிடுங்கள் எனக்கூறியவனாகும்.

## தேசப்பற்றுள்ள மக்களே தேசத்தின் அதிஉயர் பாதுகாப்பு

மக்களுடைய இந்த உணர்வுகளைப் புரிந்துகொள்ளாததும் மக்கள் துன்பத்தைப் பொருட்படுத்தாததும், மக்களை மந்தைகள் என்ற உணர்வோடு பார்த்ததும், மக்கள் மனதில் பெரும் எழுச்சியை ஏற்படுத்தியது. கிராமங்கள் நகரங்களில் எல்லாம் மக்கள் அரசுக்கெதிராகவும் மன்னனுக்கெதிராகவும் பிரபுக்களுக்கெதிராகவும் கிளர்ந்து எழுந்தனர்.

பிரபுக்களின் பல மாளிகைகள் தகர்க்கப்பட்டன. பிரபுக்களுக்கு வழங்க வேண்டுமென்ற விவசாயக்கடன் பத்திரங்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. லூயிமன்னன் வேல்ஸ் நகரில் கைது செய்யப்பட்டு ஊர்வலமாக இழுத்து வரப்பட்டான். பல கோரிக்கைகளை ஏற்க வைத்து விடுவிக்கப்பட்டான் அதன்படி தேசிய சட்ட மன்றம் உருவாக்கப்பட்டு வரி விதிப்புக்கள் தளர்த்தப்பட்டன. கைது செய்வது, சித்திரவதை செய்வது தடுக்கப்பட்டது. நிர்வாகத்தில் உள்ளவர்கள் நீக்கப்பட்டு புதியவர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

வரலாறு

மன்னர் ஆட்சி ஆட்டம் கண்டது. லூயி மன்னனைக்காப்பாற்றி கிளர்ச்சிகளை அடக்கவேண்டுமென ஆஸ்திரியா 1792ம் ஆண்டு பிரான்ஸ் மீது போர்ப் பிரகடனம் செய்தது. லூயிமன்னன் ஆஸ்திரியப் படைக்கு ஆதரவு தெரிவித்தான். ஆஸ்திரியாவின் படையெடுப்பால் ஆத்திரமடைந்த மக்கள், மக்கள் படையினைத் திரட்டினர். கிராமங் கிராமமாக மக்கள் ஆயிரக்கணக்கில் மக்கள் படையில் சேர்ந்தனர்; இம்மக்கள் படையை விவசாயிகளும் கூலித்தொழிலாளர்களுமே பலப்படுத்தினர்; ஆஸ்திரியப் படையை மக்கள் படைத் தோற்கடித்தது.

சொந்த நாட்டின் மக்கள் அழிவுக்கும் ஆஸ்திரியப் படையெடுப்புக்கும் காரணமாயிருந்த லூயிமன்னன் இனிமேலும் மன்னிக்கப்படக் கூடாது என்று தேசியப் பேரவையில் பெரும்பான்மை வாக்குகளுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 1793ம் ஆண்டு தை மாதம் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

லூயிமன்னன் கொல்லப்பட்டது மன்னர் ஆட்சிக்கு விழுந்த பெரும் அடியாகும். இதனால் அயலில் உள்ள மன்னர் ஆட்சி நாடுகள் தமது மண்ணிலும் மக்கள் எழுச்சி கொண்டு தமக்கெதிராகப் போராடத் தூண்டுதல் அளிக்கும் என்பதைக் கருத்திற்கொண்டனர். ஆஸ்திரியா, பிரித்தானியா, ரஷ்யா, அயர்லாந்து ஆகிய நாட்டுப் படைகள் பிரான்ஸ் எல்லைக்குள் நுழைந்தன.

பிரான்சில் அவ்வேளை புரட்சிகர சிந்தனையாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் இடையே உள்நாட்டுக் கலவரங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. ஆனாலும் பிரான்சிய மக்கள் புரட்சிகர சக்திகளால் தேசத்தைக்காப்பாற்ற அறை கூவல் விடுக்கப்பட்டது. இலட்சக்கணக்கான மக்கள் அணி அணியாக படையில் திரண்டனர்.

அந்நியருக்கு எதிராக ஒன்றுபட்டு போரிட்டனர். நெப்போலியன் தலைமையில் பெரும்யுத்தம் ஒன்று செய்து தம் தேசத்தைக் காப்பாற்றி. அந்நியப்படைகளை விரட்டியடித்தனர்.

பிரான்சிய மக்கள் உலகத்திற்கு புதியதோர் பாதையை திறந்து விட்டனர். அடக்கு முறையாளர்கள் மக்கள் சக்திக்குமுன் நிமிர்ந்து நின்றதாக வரலாறு இல்லை. நவீன ஆயுதங்களும் ஆட்பலமும் மட்டும் வெற்றியையோ அல்லது நாட்டின் பாதுகாப்பையோ தராது. மக்கள் அரசில் வைத்திருக்கும் ஆதரவும் பற்றும் அவர்களின் மகிழ்ச்சியான வாழ்வும் தேசப்பற்றும் ஓர் நாட்டின் உயர்ந்த பாதுகாப்பு என்பதை பிரான்சியப் புரட்சி எடுத்துக்காட்டியுள்ளது. இப்புரட்சியினால் ஏற்பட்ட வெற்றியானது தங்களை யாரும் தட்டிக்கேட்க முடியாது என்று எண்ணும் ஆதிக்க வெறி உள்ளவர்களுக்கு ஏற்பட்ட பெரும் அடியாகும்.

அதன் பின்பு உலகில் ஏற்பட்ட அமெரிக்க, பிரித்தானிய, ரஷ்ய, சீன மக்கள் எழுச்சிகளுக்கும் புரட்சிகளுக்கும் வழிகாட்டியாக இருந்தது பிரான்சியப் புரட்சி என்றால் அது மிகையாகாது.

அப்புரட்சியின் பாடங்கள் இன்றும் உலகின் பலநாடுகளுக்கு பொருந்துகிறது.

— ரமணன்

# போட்டிப் பெறுபேறுகள்

☐ ☐ நுண்ணறிவுப்போட்டி 1 ல் வெற்றியீட்டியவர்.

சு. ஸ்ரீகுமரன் முருகேசு

பண்டிதர் வீதி, சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.

போட்டிக்கான பதில்கள் காற்றலை 2ல் பிரசுரமாகியுள்ளது.

☐ ☐ ஓவிய வாக்கியப் போட்டி 1ல் வெற்றியீட்டியவர்.

சு. ஸ்ரீகுமரன்

பண்டிதர் வீதி, சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.

வெற்றியீட்டிய வாசகம்

''தமிழ் வஞ்சியின் கற்பினை வஞ்சகச் சிப்பாய்கள் வஞ்சித்ததாலே
அவள் நெஞ்சம் இடிந்துமே காந்தியின் கால்களில் நியாயம் கேட்ட போதும்
அந்தக் காந்தியின் கண்கள் தன்நாட்டுக் கயவரைக் கண்டிடச் சகிக்கவில்லை.
அவளுக்கு பதில் சொல்லவும் முடியவில்லை''.

☐ ☐ சாரளம் பொது அறிவுப் போட்டி 1ல் வெற்றியீட்டியவர்.

கு. முகுந்தன் (ஹாட்லிக் கல்லூரி, 11B மாணவன்)
'தேவிவாசா'
வல்லிபுரப் பரியாரியார் ஒழுங்கை,
புலோலி கிழக்கு, பருத்தித்துறை.

☐ ☐ குறுக்கெழுத்துப் போட்டி 1ல் வெற்றியீட்டியவர்.

செல்வி ந. சுஜாதினி
மே/பா M. பாலகுமார்
சூறாவத்தை, சுன்னாகம்.

☐ ☐ வாக்கிய ஓவியப் போட்டி - 1 க்கு வெற்றியீட்டக்கூடிய பதில்கள் கிடைக்கவில்லை.

குறிப்பு:- போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் காலக்கிரமத்தில் அவர்களிடம் சேர்ப்பிக்கப்படும்.

# ஓர் முன்னுதாரணம்

"இலட்சியத்தால் ஒன்றுபட்டு உறுதிபூண்ட மக்களே வரலாற்றைப் படைப்பார்கள்."

முத்தமிழ் விழாவின்போது தலைவர் வே. பிரபாகரன் ஆற்றிய உரையின் அடிப்படைத் தத்துவம் இதுதான். அவர் கூறினார்.

"நீண்ட காலமாகவே போராட்டத்தின் பெரும் பழுவை பொது மக்களே சுமந்து வருகிறார்கள். சாவும், அழிவும், பசியும் பட்டினியும், இரத்தமும் கண்ணீருமாக எமது மக்கள் எதிர்கொண்ட தாங்கொணாத் துன்பத்தை சொற்களில் சித்திரிக்கமுடியாது.

உலகின் எல்லா விடுதலை போராட்டங்களிலும் ஒடுக்குமுறையின் நெருப்பில் குளிப்பது பொதுசனங்களே. ஏனென்றால், அடக்குமுறையாளர்கள் போராளிகளை அழிப்பதில் காட்டும் தீவிரத்தைவிட, பொதுமக்களின் ஆன்மீக உறுதியை உடைக்கவேண்டும் என்பதில்தான் அதீத அக்கறை காட்டுகிறார்கள். ஆனால் இந்த முயற்சிகள் ஒருபோதும் வெற்றியளிப்பதில்லை."

இத் தலைமையின் கீழ் உள்ள போராளிகள்,

- மரணத்தை எந்நேரமும் ஏற்க தயாராக உள்ளவர்கள்.
- இராணுவ கேந்திர வெற்றிகளை ஈட்டுவதற்காக தமது உடலையே சுக்குநூறாக்கிக் கொள்ள தயாராக இருப்பவர்கள்.
- தமது வீட்டிற்கும், சொந்த வாழ்விற்கும் என்று ஊதியம் எதையும் கோராது 24 மணிநேரமும் நாட்டுக்காக உழைப்பவர்கள்.
- ஒரு முன்னுதாரண அறவொழுக்கத்தை பேணவேண்டுமென்பதற்காக தமக்குத் தாமே பல கண்டிப்பான ஒழுங்குகளை ஆக்கிக்கொண்டவர்கள்.
- தமக்கு வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்ற பாரபட்சமின்றி தமது அதிகாரத்தைப் பிரயோகித்து வருபவர்கள்.

இத்தகைய உயர்ந்த குணாம்சங்களைக் கொண்ட போராளிகளில் ஒருவனாக தானும் இருந்து கொண்டு, அப்போராளிகளின் தலைவனாகவும் இருக்கும் ஒரு மா-மனிதன், மாமனிதர்களுக்கு மரியாதைதரும் நிகழ்ச்சியில் தமது

"எமது மக்கள் போற்றப்பட வேண்டியவர்கள்; கௌரவிக்கப்பட வேண்டியவர்கள்; தேசிய போராட்டத்தில் மக்களின் பங்களிப்பு சாதாரணமானதல்ல, அவர்களது பங்களிப்பு அளப்பரியது என்றுதான் சொல்வேன். இலைமறைகாயாக இருந்த எமது விடுதலைப் போராட்டத்திற்கு தோள் கொடுத்துவரும் எண்ணற்ற ஆதரவாளர்களையும் அனுதாபிகளையும் மனவுறுதிபடைத்த மாமனிதர்கள் என்றுதான் அழைக்கவேண்டும்."

மாணவர்களும், ஆசிரியர்களும், ஏனைய கல்வி ஆர்வலர்களும் மக்களின் ஒரு பகுதியினரே. இவர்கள் மக்களின் அறிவுஜீவ பகுதியினர். தலைவர் பிரபாகரனின்

## சீற்றங்கொண்ட பூகம்பத்தின் ஓர் பாசக்குரல்!

இயக்கத்தின் பெருமைபற்றி எதுவுமே பேசவில்லை. தமது துன்பங்களைப்பற்றி எதுவுமே பேசவில்லை, மாறாக, மக்கள் அனுபவித்துவரும் தாங்கொணா துன்பத்துடன் தனது உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டுள்ளார்.

"இந்த தேசிய விருது அளிப்பிற்கு ஒருசில தேசபக்தர்கள் மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், ஒட்டு மொத்தத்தில் இந்தப் பங்களிப்பு எமது மக்கள் அனைவருக்கும் வழங்கப்படும் ஒரு பங்களிப்பாகவே கருதப்படவேண்டும்."

என்று கூறி தமிழீழ மக்கள் அனைவரையுமே கௌரவித்துள்ளார். மேலும், அவர் கூறினார்;-

சிந்தனைகள் மக்களின் இப்பகுதியினரையும் உள்ளடக்கியதேயாகும்.

தலைவரின் உரை வரலாற்றின் எதிர்பார்ப்புகளேயாகும். இவ் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதில் நாம் சரியாக செயற்பட்டுள்ளோமா என்பதை மீளவும் சிந்தித்து பார்க்கவேண்டும். வரலாறு எமக்காக காத்துநிற்காது. அதேபோல் அனைத்து மக்களின் பங்குபற்றலும், ஆக்கமும் இன்றி உருவான வரலாறு முழுநிறைப் பிரசவமாகவும் இருக்காது, அதன் பாதிப்புகளை மீண்டும் மக்கள் தான் முகங்கொடுக்கவேண்டும். ஆகவே எதைச் செய்யவேண்டு

மோ அதை இன்றே செய்வோம் நன்றே செய்வோம்.

தலைவர் பிரபாகரனின் இந் நடவடிக்கையை ஒரு முன்னுதாரணமாக கொள்வது மிக அவசியம். இவ் அறிக்கை ஒரு சிறந்த அறவொழுக்க பண்பை மட்டும் எடுத்துக் காட்டவில்லை. வரலாறு பற்றிய இன்னுமோர் பக்கத்தையும் எடுத்துக் காட்டுகிறது.

'மக்களே, மக்கள் மட்டுமே வரலாற்றின் ஒரு உந்து சக்தி' என்பது ஒரு ஆழ்ந்த வரலாற்று உண்மை.

அதேபோல் ''மக்கள் படை ஒன்று இன்றேல் மக்களுக்கு ஒன்றுமே இல்லை'' என்பதும் ஆழ்ந்த வரலாற்று உண்மையாகும்.

இவ் விரு வரலாற்று உண்மைகளிலும் நாம் கவனம் செலுத்த வேண்டும். மக்கள் படையின் தளபதி, பிரதான தளகர்த்தர், தலைவர் பிரபாகரன் மக்களை புரிந்துள்ளார். மக்களின் பங்கைப் புரிந்துள்ளார். அதைக் கௌரவிக்கிறார். அவர் மக்களை மட்டும் புரிந்துகொள்ளவில்லை, மக்களின் பங்கைபற்றி மட்டும் புரிந்துகொள்ளவில்லை, மக்கள் படையின் பங்கையும் புரிந்துள்ளார். தனது கடமையை நிறைவேற்றுவதில் உறுதி குலையாது நிற்கிறார்.

வரலாற்றின் தேவைக்கு ஒப்ப மக்கள் விழித்தெழுந்து வராத நிலையிலும் வரலாற்றை நகர்த்தி சென்றார். இதனால் மக்கள் பல இழப்புகளுக்கு முகங்கொடுத்தார்கள். ஆனாலும் வரலாறு நகர்ந்தது. போகவேண்டிய திசையில் போயுள்ளது. இழப்புகள் குறைக்கப்படவேண்டும் வெற்றி துரிதப்படவேண்டும்.

அதற்கு மக்கள் என்னசெய்ய வேண்டும்? தம்மையும், தமது பங்கையும் புரிந்துகொண்டால்மட்டும்போதாது. தமது படையின் பங்கையும் புரிந்து கொள்ளவேண்டும்.

போராளிகளைக் கௌரவிக்க வேண்டும், அவர்களைப் போசிக்க வேண்டும். போராளிகள் மந்திரத்தால் காய்த்த மாங்காய்கள் அல்ல. அவர்கள் சமூகத்தில் தமக்கென்று சில குறிப்பிட்ட வரலாற்றுக்கடமையை தேர்ந்தெடுத்துக் கொண்ட இளம்வயதினரே ஆகும். அக்கடமையை எல்லோரும் தேர்ந்தெடுக்காது விட்டாலும், அக்கடமையை தெரிவு செய்தோரை மதிக்கவேண்டும். அவர்களை கௌரவிக்கவேண்டும்.

அவன், எம்மிலிருந்து தோன்றியவன்.

அவன் எமது விடிவிற்காக எம்மைவிட்டுப் பிரிந்தவன்.

அவன் எமக்காக தனது சொந்த வாழ்வை தியாகம் செய்தவன்.

அவன் எமது விடிவை வென்றெடுக்க இறுக்கமான கட்டுப்பாட்டிற்குள் தம்மை அர்ப்பணித்துக்கொண்டவன்.

அவனை நேசிப்போம்!

அவனைக் கௌரவிப்போம்!

மக்களுக்காக மக்கள் படை.

மக்கள் படைக்காக மக்கள்.

இவ்விரு நிகழ்ச்சியும் முரணின்றி இணைவது மிக மிக அவசியம்.

— மாதுங்கன்

## ''தமிழர் மனிதர்கள் அல்ல'' பௌத்தம் இப்படி சொல்கிறதா...?

இலங்கையின் சிங்கள அரசியல் கட்சிகளை பௌத்த மதகுருக்களின் சங்கமே ஆட்டுவித்து வருகின்றது.

1979ம் ஆண்டுக்குப்பிறகு புதிய சிங்கள பௌத்த தீவிரவாத அமைப்புகள் தோன்றி வளர்ந்தன. ''மண்ணின்மைந்தர்'' (பூமிபுத்ர) என்ற கோஷத்தை முன்வைத்து தமிழ் சிங்கள மக்களிடையே இருந்த இனரீதியான பிளவை நிரந்தரமானதாக இவை மாற்றிவிட்டன.

சிங்கள மன்னன் துட்டகைமுனு தமிழர்களைக் கொன்று குவிக்க நேர்ந்ததைப் பற்றி நினைத்து குற்றவுணர்வு கொண்டிருந்த வேளை சிங்கள பௌத்த நூல்களான மகாவம்ச, மகாவம்ச சிங்கள், வமசத்த பகாசினி, பூஜாவலிய, சமதர்மவங்காலய ஆகிய நூல்களில் துட்டகைமுனுவை சமாதானப்படுத்துமுகமாக பின்வரும் கருத்துக்கள் சொல்லப்பட்டன.

''தமிழர்கள் மனிதர்களல்லர், எனவே இவர்களைக் கொள்வதில் தவறில்லை''

இதுபோன்ற கருத்துக்களே தற்போது தோன்றியுள்ள பௌத்த தீவிரவாத அமைப்புகளாலும் சொல்லப்பட்டு வருகின்றன இக்கருத்தியல் ஒரே சமயத்தில் பழைமையானதாகவும், நவீனமானதாகவும் விளங்குகின்றது.

பீட்டர் சல்க்
(மதங்களின் வரலாற்றுத்துறை பேராசிரியர்
உப்சலா பல்கலைக்கழகம் சுவீடன்)

## நட்சத்திரங்கள்

இது ஒரு கணிப்பீடு. திட்டவட்டமானதாக அல்லா விட்டாலும் இதுவே இன்றைய நிலையில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. அதன்படி இப்பிரபஞ்சத்திலுள்ள மொத்த நட்சத்திரங்களின் தொகை ஏறக்குறைய 1½ கே.டி. இவற்றின் வயது சுமார் 1500 கோடி ஆண்டுகள்.

ஒரு அணுத்துகளிலிருந்து இவை வெடித்துப் பறந்ததாகக் கருதப்படுகிறது. பூமிக்குக் கிட்டிய நட்சத்திரத்தின் தூரம் 4¼ ஒளிவருடம். அதாவது ஆகக்குறைந்தது 4·4 வருடங்களுக்கு முன்பு அங்கிருந்து ஒளி பரப்பியதோ, அதையே இன்று நாம் காண்கிறோம்.

☐ ☐

# ஓசோன் படையில் ஒரு துவாரம்

அந்தாண்டிற்காவிற்கு ஆய்வுகளை மேற்கொள்ளச் சென்றிருந்த விஞ்ஞானிகள் வளிமண்டலத்தில் ஓசோன் படையில் பாரிய துவாரமொன்று ஏற்பட்டிருக்கிறது என அண்மையில் அறிவித்துள்ளனர். அத்துடன் நின்றுவிடாது. இத் துவாரத்தின் ஊடாகப் புவிக்கும் உயிரினங்களுக்கும் உவப்பற்ற அல்ரா, வயலட், இன்பிராரெட் கதிர்கள் செறிவாக வரவிருக்கின்றன. அதனால் அந்தாண்டிக்காவின் பனிக்கட்டிகள் உருகும். சமுத்திர நீர்மட்டம் ஒரு மீற்றர் வரையில் உயரும். பசுபிக் சமுத்திரத்திலுள்ள ஆயிரக்கணக்கான தீவுகள் கடலினுள் மூழ்கிவிட நேரிடும் என எச்சரிக்கையும் விடுத்தனர். காலநிலையில் பாரிய மாற்றங்கள் ஏற்படக்கூடும். புவியின் வெப்பம் அதிகரிக்கும். ஊதாநிறக் கதிர்களின் படுகையால் பல்வேறு விதமான நோய்களும் ஏற்படும் எனவும் ஊகங்கள் தெரிவிக்கின்றனர். உலகம் விழித்துக்கொண்டது கடல் மட்டத் தீவுகள்பெரும் கிலிக்குள்ளாகின. மாநாடுகள் கூட்டப்பட்டன. ஓசோன் துவாரத்தை அடைப்பதற்கான வழிமுறைகள் பற்றி ஆராயப்பட்டு வருகின்றன.


இந்நிலை ஏன் ஏற்பட்டது? ஓசோன் படையாது?

புவியைச் சூழ்ந்து வாயுக்களைக் கொண்டமைந்திருக்கும் படையை வளிமண்டலம் என்கிறோம்.

இந்த வளிமண்டலம் இருப்பதால் சூரியனுடைய கதிர்கள் புவியை நேரடியாக வந்தடைவதில்லை. சூரிய கதிர்களின் ஒரு பகுதியை வளிமண்டலமானது தெறிக்கச் செய்தும், சிதறச் செய்தும், உறிஞ்சியும் விடுகின்றது. அதனால் புவிக்குத் தேவையானளவு வெப்பமே புவியை வந்தடைகின்றது. அதேபோல இரவு வேளைகளில் புவிக்குத் தேவையானளவு வெப்பத்தை வானவெளிக்குக் கலக்கப்படாது வளிமண்டலமே தடுத்துப் பதுகாக்கின்றது. இச் செயலைப் பச்சைவீட்டு விளைவு (Green house effect) என்பர். உவப்பற்றகாலநிலையில் தாவரங்களை வளர்ப்பதற்கு கண்ணாடியாலான வீடு ஒன்றைப் பயன்படுத்துவர். அதனைப் பச்சை வீடு என்பர். அக்கண்ணாடி வீடு ஆற்றுகின்ற செயலை வளிமண்டலமும் ஆற்றுவதால் இச் செயலைப் பச்சை வீட்டு விளைவு என்கின்றனர்.

இப்பச்சை வீட்டு விளைவை நிகழ்த்துகின்ற வளிமண்டலப் படைகளில் முக்கியமானது ஓசோன் படையாகும். வளிமண்டலம் புவியின் மேற்பரப்பிலிருந்து 800 கிலோமீற்றர் உயரம் வரையில் பரவியிருக்கின்றது, என்பதனை விண்வெளி ஆய்வுகள் நிருபித்திருக்கின்றன. இந்த வளிமண்டலம் மூன்று படையமைப்புக்களைக் கொண்டிருக்கின்றது. புவியின் மேற்பரப்பிற்கு மிக நெருங்கிய படை மாறன் மண்டலம் எனப்படும் இப்படை முக்கியமானது. புவியின் வானிலை, காலநிலை நிலைமைகளுக்கு மாறன் மண்டலமே முக்கியமான காரணியாகும். இப் படையின் வெப்பநிலையும், அமுக்கமும் உயரே செல்லச்செல்ல படிப்படியாக குறைந்து செல்லும். மாறன் மண்டலத்திற்கு மேல் அமைந்திருப்பது படை மண்டலமாகும். இங்கு வெப்பநிலை எங்கும் சீராக இருக்கும். அதற்கு மேல் காணப்படுவது அயனமண்டலம் எனப்படும். இங்கு உயரே செல்லச் செல்ல படிப்படியாக வெப்பநிலை அதிகரித்துச் செல்வதனை அவதானிக்கலாம்.

கீழ் படையான மாறன் மண்டலத்திற்கும், இரண்டாம் படையான படை மண்டலத்திற்கும் இடையில் சிறப்பான ஒரு எமன் படை காணப்படுகின்றது. ஓசோன் வாயுவைக் கொண்ட இப்படையை ஓசோன் படை என்பர். அளவில் இது மெல்லிய படையாக விளங்கினாலும் அது ஆற்றி வருகின்ற செயற்பாடு முக்கியமானதாகும்.




கடல் வெப்பமாக அதன் நீர் விரிவடைந்து கடல் மட்டம் உயர்கிறது.

## இயற்கை மாசுபடல்

ஞாயிற்றுக்கதிர்களில் ஊதா நிறத் தீங்கு தரும் கதிர்களைத் தடுத்து தெறிப்படையச் செய்து வான வெளிக்குத் திருப்பியனுப்பி விடுவதன் மூலம் பூமியில் வெப்பநிலை சீராக இருக்கவும், உயிரினங்களுக்குத் தீமை செய்யும் கதிர்கள் புவியின் மேற்பரப்பினைத் தழுவி மாசடைய வைக்காமலும் காக்கின்றது. இவ்வாறு நமக்கு உதவி வந்த ஓசோன் படையின் நற்செயலுக்கு நன்றி தெரிவிக்காவிடினும் பரவாயில்லை ஆனால் மனிதன் அப்படையின் சிதைவிற்குக் காரணமாகி விட்டான் என்பதே கவலைக்குரிய விடயம். வளியை மாசடைய வைத்ததன் மூலம் ஓசோன் படையில் துவாரம் ஒன்று ஏற்பட வழிசமைத்து விட்டான்.

தொழிற்சாலைகள் வாகனங்கள் ஆகியவற்றிலிருந்து வரும் புகையினாலும், அணுப்பரிசோதனைகளாலும், அணு உலைகளாலும் நம்மைச் சுற்றியுள்ள வளி மாசடைகின்றது. பாரிய கப்பல்கள், விமானங்கள் ஆகியவற்றின் மூலமும் பெருமளவில் தீங்குபயக்கும் வாயுக்கள் வளிமண்டலத்தில் கலக்கின்றன.

மிக்க உயரத்தில் பறக்கின்ற கொன்கேட் தீங்குபயக்கும் வாயுக்களை வளிமண்டலத்தில் கலக்கின்றன. இவை வளிமண்டலத்தில் கலப்பதானாலும், வளிமண்டலத்தினை ஊடுருவிச்செல்கின்ற றொக்கட்டுகள், விண்வெளிக் கலங்கள் வளிமண்டலத்தில் உயரே புகையை சேர்ப்பதனாலும் ஓசோன் படையானது குழப்பப்படுகின்றது.

### சவால்

அரசியற் தலைவர்கள், கொள்கை வகுப்போர்கள், அறிவியலாளர்கள் (விஞ்ஞானிகள்) சுற்றுச் சூழல் நிபுணர்கள் போன்ற பலருக்கும் கோள வெப்பமேற்றமானது ஒரு பெரும் சவாலாக முளைத்துள்ளது. இது முழு மனித சமூகத்திற்குமே சவால் விடுகின்றது. நாம் எமது வாழ்க்கை முறையில் அடிப்படையானதும், துரிதமானதுமான ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். இயற்கை மூல வளங்களை மிகையாக நம்வசமாக்கல் நிறுத்தப்பட வேண்டும். நாம் இந்த கோளத்தில் உயிர் பிழைத்திருக்க விரும்பினால் இயற்கையை நிலை குலையாது தாங்கிப் பிடிக்கக் கூடிய வளர்ச்சி அபிவிருத்திப் பாதையை ஏற்றுக் கொள்வதைத் தவிர எமக்கு வேறு மாற்றுவழி எதுவுமே இல்லை.

கே. எச். ஜே. விஜயதாஸ

ஓசோன் படையில் ஏற்பட்டிருக்கும் துவாரத்தினை அடைக்க வாய்ப்புண்டா? என்பதனை விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகின்றனர். வளிமண்டலம் மாசடைவதனைத் தடுப்பதற்கு முதல் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்; அதனை விடுத்து ஓசோன் துவாரத்தைச் செப்பனிடும் செயல் இயலக்கூடியதன்று. பலூன்களில் ஓசோன் படையைச் சீர்படுத்தும் வாயுக்களை நிரப்பி உயரே அனுப்புவதன் மூலம் சாதிக்கலாம், என எண்ணுகின்றனர். சாத்தியமில்லை என்பது ஒரு சாராரின் முடிவு இயற்கையில் இத்தகைய அனர்த்தங்கள் காலத்திற்குக் காலம் வருவது இயற்கை. ஓசோன் ஓட்டையும் வரவிருக்கும் அனர்த்தத்திற்கு அறிகுறி என்கின்றனர்.

ஓசோன் துவாரம் இன்று மட்டும் ஏற்பட்டதன்று. சூரியனில் களங்கங்கள் அதிகரிக்கும்போது வெப்ப நிலையிலும், கதிர் வீசலிலும் ஏற்படும் மாறுபாடுகள் ஓசோன் படையைக் காலத்திற்குக் காலம் பாதித்திருக்கின்றன அவை கண்டறியப்படாதிருக்கின்றன இன்று அவை (அந்தாண்டிற்காவிற்கு ஆய்வுகளை மேற்கொள்ளச் சென்றதால் கண்டறியப்பட்டு கவனம் செலுத்தப்பட்டிருக்கின்றது. இயற்கை தன்னைச் சமநிலைப்படுத்திக்கொள்ளும். வளிமண்டலம் தன்துவாரத்தைத் தானே அடைத்துக் கொள்ளும் என உலகிற்கு நம்பிக்கை தருகின்ற வாதங்களும் இன்று தோன்றியிருக்கின்றன.

அறிவியலாளர்கள் இதுபற்றிய ஆய்வுகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

—அரவிந்தன்

### முதலாவது அகராதி

எந்தமொழியிலும் மொழியறிவை வளர்ப்பதற்கு அகராதிகள் பெரிதும் துணைபுரிகின்றன.

அகராதியை ஆங்கிலத்தில் **Dictionary** என்பர். **Dictionarius** என்ற லத்தீன் பதத்துக்கு 'வார்த்தைகளின் சேர்க்கை' என்று பொருள் இந்த லத்தீன் பதத்திலிருந்தே ஆங்கிலப் பதம் உருவாகியது.

உலகின் முதலாவது அகராதி லத்தீன் மொழியிலேயே எழுதப்பட்டது. ஜோன் கார்லன்ட்' என்ற ஆங்கிலேயர் 1225 ம் ஆண்டு இதை எழுதினார்.

முதலாவது ஆங்கில அகராதி 1552 ம் ஆண்டு தயாராகியது. 'றிச்சாட் ஹூலோட்] என்பவர் இதை எழுதினார் இதில் ஆங்கிலச் சொற்களுக்கு ஆங்கில அர்த்தமும் லத்தீன் அர்த்தமும் தரப்பட்டிருந்தன. இதில் இருபத்தாறாயிரம்சொற்கள் அடங்கியிருந்தன.

— சிவா —

# பச்சை வீட்டு (Green House) வாயுக்கள்

பச்சை வீட்டு வாயுக்கள் - நீராவி, கரியமில வாயு, மீதேன், நைட்ரஸ், ஒக்சைட், ஓசோன், குளோரோ புளோரோ காபன்ஸ்.

குளோரோ புளோரோ காபன்ஸ் :- இது 1930களின் பின்பே உற்பத்தியானது. இது ஒரு வெப்பாற்றியாகவும், தெளிகருவியில் ஒரு ஊக்கியாகவும், கரைப்பியாகவும் பயன்படுத்தப்படும். ஒரு செயற்கை பதார்த்தமாகும். இது வளிமண்டலத்தில் வருடத்திற்கு 5 - 7வீதத்தால் அதிகரித்துச் செல்கிறது. இப்பதார்த்தம் ஓசோனுடன் இரசாயன தாக்கமுற்று அதை சிதைவடையச் செய்கின்றது.

ஓசோன்:- ஒரு மூலக்கூறில் மூன்று அணுக்களைக் கொண்ட வாயுவாகும் (0/3) சாதாரண பிராண வாயுவில் (ᴑ/2) அல்ரா ஊதா நிற கதிர்களின் தாக்கத்தாலும், மின்னலின் தாக்கத்தாலும் இது தோற்றுவிக்கப்படுகின்றது. புவிப்பரப்பில் இருந்து 25கி. மீட்டர் தூரத்துக்கு அப்பால் ஒரு படையாக படர்ந்துள்ளது.

மீதேன் :- அசைபோடும் விலங்குகள், கொற்பயிற், இயற்கை வாயுவை பயன்படுத்தும் யந்திர தொழில்கள் ஆகியவற்றில் இருந்து தோன்றுகிறது. இதன் அளவு வருடத்திற்கு 1 வீதத்தால் அதிகரித்துச் செல்கின்றது.

காபநீர் ஒக்சைட்:- வளிமண்டலத்தில் இதன் அடர்த்தி வருடத்திற்கு 4 வீதத்தால் அதிகரித்துச் செல்கின்றது.

நீர் 4°C தனது கூடிய அடர்த்தியைக் காட்டும். இதற்கு கூடியோ குறைந்தோ ஆன வெப்பநிலையில் நீர் விரிவடையும். இதனால்தான் அடர்த்தி குறைந்த பனிக்கட்டி நீரில் மிதக்கிறது. சமுத்திரம் சூடானால் தண்ணீர் விரிவடையும், கடல்மட்டம் உயரும். இன்றைய வெப்ப அதிகரிப்பின்படி கடல்மட்டம் வரப்போகும் 30 - 50 வருடங்களில் 1 மீட்டரால் உயரும்.

கடந்த நூறு வருடங்களுள் புவியின் வெப்பநிலை 0·5°C ஆல் அதிகரித்துள்ளது.

கடந்த 100 வருடங்களில் துருவங்கள் உருகியும், சுருங்கியும் உள்ள அதேவேளை கடல் மட்டம் 10ச. மீட்டரால் அதிகரித்துள்ளது. □

# பேசத்தெரியாத செயல்வீரர்கள்

ஆகாய விமானத்தை அமைத்து, அதை முதன் முதலாக ஓட்டிப் புகழ்பெற்றவர்கள் றைட் சகோதரர்கள்,

அவர்கள் இருவரும் வெட்டிப்பேச்சுப்பேச விரும்ப மாட்டார்கள், பொதுக்கூட்டங்களில் பேசுவதையும் அவர்கள் வெறுத்தார்கள்.

ஒருமுறை றைட் சகோதரர்களுக்கு ஆகாயவிமானத்தை முதன்முதலில் ஓட்டி சாதனை புரிந்தவர்கள் என்பதற்காக அறிவியல் அறிஞர்கள் ஒரு பெரிய விருந்துக்கு ஏற்பாடுசெய்தார்கள்.

அந்த விருந்துக்குப் பல அறிவியல் அறிஞர்களும், பொறியியல் அறிஞர்களும் அழைக்கப்பட்டிருந்தார்கள்.

விருந்துக்குத் தலைமை வகித்தவர், றைட் சகோதரர்களுள் மூத்தவரான வில்பர் றைட்டை அழைத்து தங்கள் சாதனைகள் குறித்து விளக்கிப் பேசுமாறு கேட்டுக்கொண்டார்.

வில்பர்றைட் எழுந்துவந்து ஒலிபெருக்கியின் முன்னால் நின்று ''எங்களைப்பேச அழைத்ததில் ஒரு தவறு நேர்ந்துவிட்டிருக்கிறது. உண்மையில் நன்றாக சொற்பொழிவாற்றும் வல்லமை படைத்தவன் என் தம்பி ஆர்வில்றைட்தான். எனக்கு பேசத்தெரியாது'' எனக்கூறி அமர்ந்துவிட்டார்.

அவ்வாறே விருந்துக்கு தலைமை தாங்கியவர் ஆர்வில்றைட்டை அழைத்து சொற்பொழிவாற்றுமாறு கேட்டுக்கொண்டார்.

ஆர்வில்றைட் கம்பீரமாக ஒலிபெருக்கியின் முன்னால் வந்துநின்றார். ''என்தமையனார் வில்பர்றைட் அற்புதமாக பேசிவிட்டபிறகு நான் பேசுவதற்கு என்ன இருக்கிறது?'' என்று கூறிவிட்டு அமர்ந்துவிட்டார்.

□ □ □

# தமிழர் பாரம்பரிய கல்வி நிறுவனங்கள்

— கலாநிதி சபா ஜெயராஜா

கல்விச் செயற்பாடு செழிப்புற்று வளர அதனைப் பராமரிக்கும் நிறுவன அமைப்பு முக்கியம் ஆகும். இதன் உண்மை தமிழர் பாரம்பரியத்திலும் காணக்கூடிய தொன்றாகும். திண்ணைப் பள்ளிக் கூடங்கள், நிலாப் பள்ளிக் கூடங்கள் கோயிற் பள்ளிக் கூடங்கள், பட்டறைப் பள்ளிக் கூடங்கள், குருகுலக் கல்விக்கூடங்கள், சங்கம் முதலிய பழம் பெரும் அமைப்புக்கள் தமிழர் தம் கல்வி நிறுவன ஒழுங்கமைப்பின் சான்றுகளாகும்.

திண்ணைப் பள்ளிக் கூடங்களில் 3 வகையான கற்கை நெறிகள் மேற்கொள்ளப்பட்டன என அறியக் கிடக்கின்றன. இன்றைய வழக்கில் நாம் தொடக்க நிலை, இடைநிலை, உயர்நிலை என்பவற்றுக்கு சமமானவையாக அவற்றைக் கொள்ளலாம். நெடுங்கணக்கு, எண், வாய்ப்பாடு, நீதிக்கதைகள், தேவாரம். என்பன தொடக்க நிலையில் இடம் பெற்றன. இலக்கணம், இலக்கியம், அறநூல்கள், சமய நூல்கள், கணிதம் முதலியவை இடைநிலையில் பின்பற்றப்பட்டன. சோதிடம், வான்நூல், மெய்யியல் இலக்கிய ஆய்வு, இலக்கணஆய்வு, உயர் கணிதம் பிறமொழிகள் அடங்கியதாக உயர்நிலைக் கற்கை நெறிகள் அமைந்தன. இதனைக் குறிப்பிடும் போது அனைத்துத் திண்ணைப் பள்ளிக்கூடங்களிலும் ஒரே சீரான கலைத்திட்டம் பின்பற்றப்பட்டதாகக் கொள்ளமுடியாது. என்பதை நினைவிற் கொள்வது அவசியமாகும்.

அவற்றில் கற்பித்த ஆசிரியர்களது ஆற்றல், ஆளுமை வேறுபாடுகளுக்கேற்ப கலைத்திட்ட அனுபவங்கள் வேறுபட்டன. 3 நிலைகளிலும் ஒரே ஆசிரியரே பணி ஆற்றியமையால் மாணவர்களுடைய வளர்ச்சியில் நெடுங்கோட்டுத் தொடர் அமைப்பினை இலகுவாகக் கட்டி எழுப்ப முடிந்தது. அன்றைய கலைத்திட்டம் ஆன்மீகம். உலகியல் இரண்டுக்குமிடையே சமநிலையை ஏற்படுத்துவதற்கும் மாணவரது நடத்தைகளை அறவழிப் படுத்துவதற்கும் பொருத்தமானஅனுபவங்களைக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நிலாக்காலங்களில் இரவில் இயங்கிய பள்ளிக் கூடங்கள் நிலாப்பள்ளிக்கூடங்கள் எனப்பட்டன. தற்காலத்தில் முறைசாரக் கல்வி வழக்கினோடு நிலாப் பள்ளிக்கூடங்களை ஒப்புமை காணலாம். புராணங்கள் இலக்கியங்கள் முதலியவற்றைப் படித்தலும், விளக்கலும், வியாக்கியானஞ் செய்தலும் அங்கு இடம்பெற்றன. பெரியபுராணம், கந்தபுராணம், இராமாயணம், மகாபாரதம், கோவலன்கதை எனும் நூல்கள் நிலாப் பள்ளிக் கூடங்களில் படிப்பிக்கப்பட்டன. இவ்வகை நிலாப் பள்ளிக் கூடங்கள் "புலமைசார் நிலாப் பள்ளிகள்" எனப்பட்டன. "உடற்கலை நிலாப்பள்ளிகள்" எனப்பெயர் பெற்ற வேறொரு நிலாப்பள்ளிகளும் இருந்தன. வாள், வேல் முதலிய படையாட்சி மல்யுத்தம், கம்பு ஆடுதல் நெருப்போடு விளையாடுதல். முதலிய கலைகள் அங்கு கற்பிக்கப்பட்டன. இங்கு கற்பித்த ஆசிரியர்கள் உபாத்தியாயர் என்றே அழைக்கப்பட்டனர்.

கோயிற் பள்ளிக் கூடங்கள் இந்துக் கோயில்களைச் சார்ந்திருந்தன. அங்குள்ள மடங்களில் செயற்பட்டவை யாவன அப்பள்ளிக்கூடங்கள் பிற்காலத்தில் "மடாலயங்கள்" என அழைக்கப்படலாயின. "மெய்ப்பொருள் காண்பதறிவு" என்ற இலக்கியத்தில் ஆழ்ந்த ஆய்வினை மேற்கொள்வதும் சமயநெறிகளை துறைபோகக் கற்றலும் அப்பள்ளிக் கூடங்களில் நிகழ்ந்தன. இங்கு கற்றவர்கள் பிரசங்கிகளாகவும் பட்டி மன்றங்களில் வாதிடுவோராகவும். திறமை பெற்றனர். இங்கு பயின்று சமயநெறியில் மேலும் கற்பதற்காக பாரத நாட்டுக்குச் செல்லும் வழக்கும் இருந்தது. அதைப் போல பாரத நாட்டிலிருந்து இங்கு வந்து மடாலயங்களில் கற்போரும் இருந்தனர்.

பட்டறைப் பள்ளிக் கூடங்கள் பாரம்பரிய தொழிற் கல்வி நிலையங்களாக விளங்கின. இங்கு கற்பித்தவர்கள் 'ஆசாரியர்' என அழைக்கப்பட்டனர். ஆசாரியர் என்பது கம்மாளரின் பட்டப்பெயராக அமைந்தது ஆசாரம் என்பது தொழில் சார் ஒழுக்கங்களைச் சுட்டிக் காட்டுவதாயிற்று. தொழில் சார் கல்வி வழக்கில் இது திறான் என்ற பொருள் தரும். ஆசாரியின் வீட்டு முன் புறத்திலே பட்டறை அமைக்கப் பட்டிருக்கும். மரக்கைத்தொழில், உலோகக் கைத்தொழில், மட்பாண்டக் கைத்தொழில், நெசவுக் கைத்தொழில் முதலியவை பட்டறைகளிலே கற்பிக்கப்பட்டன. கிராமியத் தன்னிறைவும் பொருளாதார நடவடிக்கைகளுடன் இந்த செயற்பாடுகள் இணைந்திருந்தன. பெரும்பாலானவற்றுள் தந்தை - மகன் என்றமுறையில் கற்பிக்கப் பட்டு வந்தாலும் திறமையான ஓர் ஆசாரியிடத்து அவரது உறவினர்களான பிள்ளைகளும் சென்று கற்றனர்.

குருகுலப் பள்ளிக்கூடங்கள் பெரும்பாலும் அழகியற் கல்வியையும் மருத்துவக் கல்வியையும் வழங்கும் நிறுவனங்களாக விளங்கின. இசை, நடனம் போன்ற அழகியற் கலைகளைக் கற்றோர் குருவின் இல்லத்தில் வாழ்ந்து குருவுக்கு பணிவிடைகள் செய்து குடும்பத்

2 ஆம் பக்கம் பார்க்க



# ஒரு கவிஞனின் தீர்க்கதரிசனம்

கவிதை

இலக்கியத்தின் இனியதோர் ஊடகம்.
கவிஞன் –
காலத்தின் குரலாய் நின்று பேசுபவன்.

கடந்த காலத்தைப்பற்றிய தேடலும், நிகழ்காலத்தின் மீதான தெளிவுப்பார்வையும், எதிர்காலத்தைக்குறித்த தீர்க்கதரிசனமும் ஒரு கவிஞனுக்கு இருக்கவேண்டியது அவசியமாகிறது.

இம்மூன்றும் இணைந்திருந்தமையால்தான் இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞனாக பாரதி போற்றப் படுகிறான். இனிவரும் நூற்றாண்டுகளிலும் கவிதைகளூடாக பாரதி வாழ்ந்து கொண்டுதானிருப்பான்

தமிழர்களாகிய எமது போராட்ட வரலாற்றின் இலக்கியப்பதிவுகளில் கவிஞர் காசிஆனந்தன் அவர்களுடைய கவிதைகள் முக்கியமானதோர் இடத்தினைப் பெற்றுள்ளது எனலாம்.
அறுபதுகளில் தமிழர் போராட்ட எழுச்சியைத் தூண்டும் விதமாக இவர் எழுதிய கவிதைகளில் எதிர்காலத்தைப் பற்றிய நோக்கு காணப்படுவதை எவரும் மறுக்க முடியாது.

அந்தக்காலந்தொட்டே தமிழ்மக்கள் மீதான சிங்கள அரசின் ஒடுக்குமுறைகள் பல்வேறு வடிவங்களில் முடுக்கி விடப்பட்டு வந்தபோதிலும், அந்தக்காலத்திலிருந்த தமிழ் அரசியல் அமைப்புக்களோ சாதாரண பொது மக்களோ ஆயுதப் போராட்டம்தான் இதற்கொரு வழியென்று சிந்தித்துப் பார்க்கவில்லை.

தமிழன் சுயகௌரவத்துடன் வாழ்வதற்கு தனிநாடு ஒன்றுதான் முடிவு என்பதனையும் அதனை அடைவதற்கு ஆயுதப்போராட்டமே வழி என்பதனையும், அறுபதுகளில் எழுதப்பட்ட காசியின் கவிதைகள் கூர்மையுடன் கூறுகின்றன. தமிழருக்கென்று தனிப்படையொன்று உருவாக வேண்டுமென்ற கவிஞரின் கனவுகள் அப்போதே கவிதைகளாகி விட்டன.

அத்துடன்–
அந்தப்படை எவ்வாறான வீரத்தையும், உறுதியினையும் கொண்டதாகவிருக்கும் என்ற அந்தக்கனவுகள் இன்று கண்முன்னே நிதர்சனமாகி வருகின்றன.

1968 ம் ஆண்டு நூலுருவான ‘தமிழன்கனவு’ கவிதைகளை இன்று படித்துப்பார்க்கும்போது வியப்பாக இருக்கின்றது. அந்தக்கவிதைகள் சிலவற்றினை இன்று மீட்டுப் பார்ப்பது சுகமான சுவையானதோர் அனுபவமாகவிருக்கும்.

எட்டுத்திசையும் தமிழ்ச்சாதி
    எருமைச்சாதி போலாகி
கெட்டுக்கிடந்த நிலைகண்டு
    கேடு தொலைக்கப் புறப்பட்டேன்
வீசுகுண்டால் எறிந்தாலும்
    வெட்டி உடலம் பிளந்தாலும்
ஆசைக்கொருநாள் போராடி
    ஆவி துறக்கப்புறப்பட்டேன்.

தமிழனின் அவல நிலைகண்டு அவருக்குள் எழுந்த போர்க்குணத்தினை இவ்வரிகள் தெட்டத்தெளிவாகக் காட்டுகின்றன.

காலமுனிவனின் கூற்றாக கவிஞர் சொல்லும் இன்னொரு பாடலில் திடமானதொரு நம்பிக்கை இதழ் விரிக்கிறது.

ஆண்டிலொரு நூறோ? இலை
    அதிலே ஒருபாதி
தாண்டு முனம் தமிழர்க்கொரு
    தனிநாடுருவாகும்
ஈண்டிதனை இறைவனுமக்
    கொடுத்தருளச் சொல்லி
வேண்டினதால் செப்புகிறேன்
    விடுக துயரென்றான்.

பூத்தமரம்போல் விளங்கும்
    புதிய தமிழ்க்குலமே
காத்திருந்து கனிபறிப்பீர்
    அதுவரைக்கும் இமைகள்
சாத்தி உறங்காதீர்! படை
    வரிசை சரிபார்ப்பீர்
கூத்துவருமொருநாள் ...... உயிர்
    கொடுத்து முடிகொள்வீர்.

போராட்டப்பாதையில் தமிழ்ப்படை இடையிடையே எதிர்கொள்ளும் இடையூறுகளையும் கற்பனை செய்து அப்போதே கவிஞர் வேதனைப்பட்டிருக்கிறார்.

மட்டக்களப்பும் யாழ்நகர் மண்ணும்
மரபில் வேறுபட்டவையென்றொரு
குட்டித்தலைவன் குழப்புவானங்கே
குன்றஞ்சூழ்ந்த மலைநாட்டானை
திட்டுவானொரு சிறுமகன் ...... மன்னார்
திருமலையெனச் செந்தமிழ்க்கூட்டம்
இருந்தகளத்தில் எரிந்தது நெஞ்சே!

பிரிவினை வாதங்களால் ஏற்படும் குழப்பங்களை எண்ணி கவிஞர் ஆதங்கப்படுகிறார்.

ஓங்கி வளர்ந்தமரம் - காற்றில்
உடைந்து விழுந்தது போல்
ஆங்கு தமிழ்மறவர் - நூறாய்
ஆனார் நொடியினிலே ......



விவேக்

முரண்பாடுகள் தீர்கிறது. படைமீண்டும் ஒன்றுசேர்கிறது. கவிஞர் மகிழ்ச்சிக்கடலில் குளிக்கிறார்.

தேனைமறந்து கள்ளுண்டு
கிடந்தவர் திருந்தி எழுந்தாரங்கே
பூனை நாயெனத்தமிழன்
இழிவுற்ற புன்மையினி இல்லையென்று
வானை இடித்ததோர் சங்கம்
ஒருவன் வல்லவனங்கே உரைசெய்வான்.

சொந்த இனத்தவனாலேயே காட்டிக் கொடுக்கப்படும் சம்பவங்களையும், எதிரியின் தாள்பிடித்து அடிமைச் சுகங்களில் மூழ்கிக்கிடக்கும் தன்மைகளையும் கவிஞர் சாடுகிறார்,

தீனி முதலென்பான் வயி
றுடையோன்! இவன்தோழன்
ஈனமகன் தன்னலத்தான்
இனத்தை மதிப்பானோ?

தானுயர்வு பெறுவதெனில்
தாள்பிடித்து நிற்பான்
மானம் விலைவைப்பான்! இவன்
மனைவியையும் விற்பான்.

......நச்சு மகன் குடிகேடன்
நன்றியிலாப்பாவி
உச்சி பிளந்திடுவீர்! இவன்
ஒழிந்தால் விடிவுண்டே!

காட்டிக்கொடுக்கும் கயவர்கள் மீது கடுமையான கோபக்கனலை எறிகிறார் கவிஞர்.

தமிழருக்கென தனியானதோர் படை உருவாகி அது எதிரிகளுக்கெதிராக உக்கிரமான போரை நடாத்தும் என சராசரி மனிதர்கள் எவரும் அறுபதுகளில் கற்பனை செய்து கூட பார்த்திருக்க மாட்டார்கள். வானிலிருந்து மேற்கொள்ளப்படும் விமானத்தாக்குதல்களை தமிழ் மக்கள் சந்திக்க வேண்டிவருமென்பதை அப்போது எவரும் எண்ணிப் பார்த்திருக்க முடியுமா? ஆயுதப் போராட்டம் தோன்றி எண்பத்து நான்காம் ஆண்டின் இறுதிப் பகுதியிலேயே விமானத் தாக்குதல் ஒன்றைக் கண்டோம். இப்போது விமானத் தாக்குதலே எதிரியின் பிரதானத் தாக்குதலாக அமைந்துவிட்டது.

அட! கவிஞர் அதனை அறுபதுகளிலேயே கற்பனை செய்து விட்டார் தெரியுமா! அது மட்டுமல்ல, தாக்கும் விமானத்தைத் திருப்பித் தாக்கும் வலிமையினை தமிழ்படைபெறும் என்பதனையும் அவர் அப்போதே பாடிவைத்துவிட்டார்.

பறவையின் நிரையென
வானிடை எழுந்தன
பகைவரின் ஊர்திகளே!

சிறகுகள் துகள்பட
அலைமிசை பறந்தன
தமிழர் கருவிகளே!

எவ்வளவு நிதர்சனமாகிவிட்ட கற்பனை...!

காசி. அவர்கள் வித்தியாசமானதோர் கவிஞன். தமிழைப்பற்றியும், தமிழரின் தன்மானப் போராட்டம் பற்றியுமே அவர் பாடியிருக்கிறார்.

கனவு விமானம் செய்து, காதற்பெண்களுடன் காற்றிலே பவனிவரும் கவிதை வரிகளை மட்டும் அதிகமாக வரையும் கவிஞர்களிடமிருந்து இவர் வேறுபடுகிறார்.

இவரின்காதல் தமிழ்க்கன்னியைச் சுற்றியே படர்ந்து வந்துள்ளது.

தெள்ளு தமிழ்மகள் வண்ண முகத்திலே
செம்மை கொலுவிருக்கும்—ஒளி
கொள்ளும் இதழில் மலர் நகையொன்று
குழைந்து குழைந்திருக்கும்! உயிர்
அள்ளும் விழிகள் இரண்டிலுமாயிரம்
ஆற்றல் நிறைந்திருக்கும்—இவள்
உள்ளமிருக்கும் இடத்திலே காதலும்
ஒளிந்து மறைந்திருக்கும்.

தமிழ்ப்படையின் அமைப்பையும் அழகையும் ஆனந்தமாக கற்பனை செய்து கவிஞர் மகிழ்ந்திருக்கிறார்.

சித்திரச்சோலை புறத்தினில் வானிடை
சிறகை அடித்தொலி செய்தே
கத்திப்பறந்த பறவை அணியென
காற்றில் பறக்குது தானை!
புத்தொளி வீசும் விழிகளைப்பாடவோ
மூச்சுப்புயலை எழுதவோ
நத்து நடைத்தமிழ் தானைநடையினை
பாடத்தகுமோ தமிழரே!

தமிழ்மறப்படையின் மூலமாக இறுதியில் தனிநாடு உருவாகும். அந்நாடு எலலா விதங்களிலும் சுதந்திரம் பெற்றதாகவே அமையும் என்பதையும் கவிஞர் சொல்ல மறக்கவில்லை.

நீள்நெடு மாளிகை வீடுகள் நிறைந்தன
குடிசைகள் நீங்கினவே!
நாளெல்லாம் வாடிய ஏழையர் முகம்
நகைத்தன நகைத்தனவே!
ஆண்டவர் அடிமையர் உள்ளவர் அற்றவர்
ஆகிய பேதங்கள்
தூள்பட விடுதலை வந்தது! விண்மிசை
பறவைகள் துள்ளுதடா!

அறுபதுகளில் கவிஞர் கண்ட கனவுகளின் பல கட்டங்கள் இன்று நிதர்சனமாகி வருகின்றன. அவரின் கனவின் இறுதிக் கட்டமும் நிறைவேறும் நாள் வெகு தொலைவில் இல்லை. அதனையும் அவர் கண்கூடாக கண்டு மகிழ வேண்டுமென, மாமனிதர் விருது பெற்றிருக்கும் அவரை வாழ்த்துவோம்.

இன்னொரு நிலவில் சந்திப்போம்.

இலக்கியக் காட்சி

# தன்னலமற்ற தலைமை

நிலத்தில் அடிவைக்க முடியாத அளவுக்கு வெப்பம் மிகுந்த காலம், நெருப்புப்போன்ற வெப்பதினால் அந்தக்காடு வரண்டது. செடிகளும் கொடிகளும் வரண்டு காய்ந்தன. நீர் நிலைகள் வற்றிப்போயின.

பருகுவதற்கு நீர் தேடி மூன்று யானைகள் நெடுந்தூரம் அலைந்து வருகின்றன. தகப்பன் யானை. தாய் யானை. அவற்றின் குட்டியானை.

ஒரு இடத்தில் சிறிதளவு நீர் காணப்படுகின்றது. அதைக் கண்டதும் அந்த யானைகளுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. குட்டியானை ஓடிச்சென்று நீரைப்பருகிய தோடு அதைக் கலக்கியும் விட்டது ஆண் யானை நீர் பருக அவசரப்படவில்லை. பெண்யானை பருகும் வரை காத்திருந்தது. அதன்பின் எஞ்சிய சொற்ப நீரையே பருகியது.

கலித்தொகைப் பாடலொன்று இவ்வாறு கூறுகின்றது.

இது புலவரின் கற்பனை என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இதன் மூலம் புலவர் நல்லதொரு புத்திமதியை நமக்குக் கூறுகின்றார். நல்ல தலைமை எவ்வாறு இருக்கவேண்டும என்பதைச் சொல்கின்றார்.

இந்தக் யானைக்குடும்பத்தின் தலைவர் ஆண் யானை. அது குடும்பத்தின மற்றைய உறுப்பினர்களின் நலனைஃய முதலில பேணி அதன் பின்னரே தனது நலனைக் கவனிக்கின்றது.

தன்னை நம்பிப் பின்பற்றுவோரின் நலனை முதலில் பேணும் தன்னலமற்ற தலைமையே நல்ல தலைமை என்பதைப் புலவர் இப்பாடலின் மூலம் எடுத்துரைக்கின்றார்.

''அடிதாங்கும் அளவின்றி அழலன்ன வெம்மையால்
கடியவே கலங்குழாய் காடெனறையார் அக்காட்டுள்
துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணும் களிறெனவும்
உரைத்தனரே.''

— உருத்திரா —

## தெறிப்பு

□□ 'சாளரம்' இரண்டாவது இதழில் பொருளியல் நோக்கில் வெளியான 'காட்சிக்காகவா வாழ்ப்பயிலவா?', என்ற கட்டுரை ஆசிரிய சமுதாயத்திற்கு ஊக்கம் கொடுப்பதாய் அமைந்துள்ளது.

மாணவர் கல்வி அவர்களை வாழ்ப்பயிலச் செய்வதாக அமையவேண்டும் என்ற பிரதான நோக்கினை கட்டுரை சொல்கிறது. பாராட்டுகிறோம். உற்பத்தித் திறன்களை வளர்த்தல். உற்பத்தி செய்தவற்றை சந்தைப் படுத்தல், பங்கு இலாபங்கள் பகிரப்படுதல் கூட்டுப்பண்ணை முறைகளுக்கு அத்திவாரமிடுதல் ஆகிய நோக்குகளைக் கொண்ட கல்விச்சீரமைப்பினை தமிழீழத் தேசிய ஆசிரியர் ஒன்றியம் செயல்வடிவமாக்க முனைந்துள்ளமையையும் அறியத்தருகின்றோம்.

குழந்தைகளில் அறிவற்றவர் என்று யாருமே இல்லை. கல்வி முறைக்குறைபாடுகள் குழந்தைகளில் பலருக்கு வளர்ந்தபின் முட்டாள் பட்டம் சூட்டி விடுகிறது.

தேசப்பற்று, தன்னம்பிக்கை, ஆக்கத்திறன் என்பனவற்றை அனைத்து குழந்தைகளிடமும் வெளிக்கொண்டு வரமுடியும் இந்தப்பணி அறிவியல் சமுதாயத்திடமே தேங்கிக்கிடக்கிறது.

மாறிவரும் உலகில் மாற்றங்கள் படைப்பது நம் அனைவரதும் கடமையாகும்.

தமிழீழத்தேசிய
ஆசிரியர் ஒன்றியம்

□□ சாளரத்தின் பக்கங்களைப் புரட்டும்போது ஆங்காங்கே தென்படும் கல்விபற்றியதும் மனித வாழ்க்கைக்கு உகந்ததுமான கருத்துக்கள் வரவேற்கக்கூடியதாக உள்ளன.

கண்ணீரையும், செந்நீரையும் சிந்தி உழைக்கும் விவசாயிகள் வாழும் கிளிநொச்சிப்பிரதேசத்தில் அவர்களுக்குப் பயன்படக்கூடியதான விவசாய போதனைகளையும் அறிவுரைகளையும் கொண்ட கட்டுரைகளை சிலவற்றையும் சேர்த்துக்கொண்டால் இங்குள்ள விவசாயிகள் பயன்பெறக் கூடியதாக அமையும்,

பா. பாக்கிய சுகந்தி
வகுப்பு - 9
கனகபுரம் அ. த. க. பாடசாலை
கிளிநொச்சி.

□□ 'சாளரம்' யூலை இதழ் வடிவ அமைப்பில் முதலாவது இதழைவிட சிறப்பாக அமைந்துள்ளது. ஆனால் பல விடயங்கள் மறுபிரசுரமாக பிரசுரிக்கப் பட்டிருந்தன. முக்கியம் வாய்ந்த ஒரு சிலவற்றைத் தவிர கூடிய வரையில் மறுபிரசுரம் செய்வதைத் தவிர்த்தால் 'சாளரத்தின்' தரம் கூடும் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயமாகும்.

மா. கலியுகவரதன்
தாவடி
யாழ்ப்பாணம்

□□ 'சாளரம்' சஞ்சிகை இரு இதழ்களும் வாசிக்கக் கிடைத்தன. பயன்தரும் விடயங்கள் தொடர்ந்து வருவதால் ஒவ்வொரு இதழையும் சேர்த்து வைக்கலாம் என்று எண்ணியுள்ளேன். ஆனால் இடைநடுவில் எமது பகுதிக்கு வராமல் விட்டுவிடுமோ என்று அச்சமாகவுள்ளது. என்னைப்போன்ற ஆர்வமுள்ள மாணவர்கள் சந்தாப்பணம் கட்ட தயாராகவுள்ளோம். இதன்படி நடவடிக்கை எடுத்து ஒவ்வொரு இதழும் எமக்கு கிடைக்கும்படி செய்யுமாறு வேண்டிக் கொள்கிறேன்.

வே. கவிதா
நெடுங்கேணி

□□ 'சாளரம்' படித்தபோது நானும் சாளரத்திற்கு எழுதவேண்டும் போல் ஆவலாகவுள்ளது. எழுதுகின்ற விடயங்கள் எப்படி எழுதுவது என்பது தெரிந்தாலும் எழுதி முடிந்த பின்பு அவை திருப்தி இல்லாமலுள்ளது. சாளரத்தினூடாக எமக்கு கட்டுரை எழுதும் பயிற்சிகளை ஊக்குவிக்க முடியுமா?

எம். தர்ஷனி
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
யாழ்ப்பாணம்

**கதவு 1** **காற்றலை 3**

# போராட்டக் கல்வி

ஆனையிறவு முற்றுகைப்போர் 10-07-91 இல் ஆரம்பமாயிற்று. அன்றிலிருந்து ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டது. ஊரடங்குச் சட்டத்திற்கு இங்கு யாரும் மதிப்பளிக்கவில்லை.

பல காரணங்களால் பாடசாலைகளில் கல்வி சீராக நடக்கவில்லை. இருந்தும், தொடர்ந்து இயங்க முயற்சிகள் நடக்கின்றன. பல பாடசாலைகள் இயங்குகின்றன,

கல்வியின் நோக்கம் ஈகைமனப்பான்மையை வளர்ப்பதும், தன்னம்பிக்கையை ஊட்டுவதும், சமூகத்தோடு, சமூகநலனுக்காக சேர்ந்து உழைக்கும் தன்மையை உருவாக்குவதுடன் தேசத்தை கட்டிவளர்க்கும் தேசிய உணர்வை வளர்ப்பதும் ஆகும்.

போராட்ட காலத்தில் இவை எல்லாவற்றையும் கற்றுக்கொள்ள முடிகின்றது. அதன் பலனை நேரடியாகப்பார்க்க முடிகின்றது.

1. போராடுதல்
2. போராடும் போராளிகளுக்கு பதுங்கு குழிகள் அமைக்க உதவுதல்.
3. காயப்பட்டோருக்கு முதலுதவி செய்தல்.
4. காயப்பட்டோரை பராமரித்தல்.
5. இரத்ததானம் செய்தல்.
6. வைத்திய சாலை முதல் பல பகுதிகளை துப்புரவு செய்தல்.
7. வீதி ஒழுங்கு கவனித்தல்.

இவ்வாறு தனக்கென வாழாது சமூகத்திற்காக, தேசத்திற்காக உழைக்க போராட்டம் கற்றுத்தருகிறது,

மிகப்பெரிய ஈகத்தை, தன்னம்பிக்கையை, போராளிகளிடம் காண்கிறோம். போராளிகளில் பெரும்பாலோர் மாணவர்களே!.

போராட்டத்தின் தாக்கம் எம்தாயகம் எங்கும் காணக் கூடியதாகவுள்ளது. இதிலிருந்து எவரும் விலகி நிற்க முடியாது.

மாணவர்களே! பாடசாலையில் நாம் கற்கும் நோக்கத்தை நிறைவு செய்யும் பெரியதொரு தளத்தை இப் போராட்டம் எமக்குத்தந்துள்ளது. அதனை சரியான முறையில் பயன்படுத்த வேண்டியது ஒவ்வொரு மாணவனினதும் மிகப் பெரிய கடமையாகும்.

# குறுக்கெழுத்துப் போட்டி

இல. 1க்கான விடை,

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ச | ம | 13 ஸ் | கி | ர | 14 த | ம் | ✻ |
| ங் | ✻ | னா | ✻ | 8 ஆ | ரி | ய | ம் |
| 2 க | ன் | ன | ட | ம் | 9 ச | ம | 15 ண |
| 3 கா | க | ம் | ✻ | ✻ | ன | ✻ | ர |
| 4 ல | நா | ✻ | 12 கை | ✻ | ம் | ✻ | ல |
| ம் | ✻ | 7 சை | ன | ம் | ✻ | 17 கு | ✻ |
| ✻ | 6 சி | வ | ன் | ✻ | 10 னி | டி | 16 பா |
| 5 சி | ல | ம் | பு | ✻ | ✻ | 11 மை | ல் |

குறிப்பு

- சென்றதடவை 17எண் அச்சுப்பதிக்கப்படவில்லை.
- இடமிருந்து வலம் 12வது உதிர்த்து என்பதற்கு பதில் கூப்பி என்று பதிக்கப்பட்டுள்ளது.

இவ்விரு தவறுகளுக்காகவும் வருந்துகிறோம்.

# ஆனையிறவு தளம் மீதான தாக்குதல்

## தமிழ் தேசிய பிரதேச ஒருமைப்பாட்டின் ஒரு மைல் கல்

ஆனையிறவு இராணுவ தளம்மீதான தாக்குதல் தமிழ்தேசிய நிர்மாண வரலாற்றில் ஒரு முக்கிய கட்டமாகும். தமிழ் மக்களின் தேசிய தன்மையை, தேசிய ஒருங்கிணைப்பை சிங்கள ஆதிக்கம் பல்வகையிலும் தடுத்து வருகின்றது. அதிலொன்று தமிழ் மக்களின் பிரதேச ஒருங்கிணைப்பைத் தடுப்பதில் மிக அக்கறையாக உள்ளமை ஆகும். பிரதேச ஒருங்கிணைப்பை நான்கு பிரதான வழிமுறைகள் மூலம் அரசு தடுக்கிறது.

அவையாவன;

1. இராணுவ தளங்களை அமைத்தல்.
2. சிங்கள குடியேற்றங்களை ஸ்தாபித்தல்.
3. வீதிப் போக்குவரத்து இணைப்பின்மை, வெகுஜன தொடர்பின்மையை உருவாக்குதல்.
4. நிர்வாக ரீதியாக தமிழ் பிரதேசத்தை சிங்கள நிர்வாகப் பிரிவுகளுடன் இணைத்தல் என்பனவாகும்.

ஒரு தேசிய இனத்தின் பிரதான அம்சம் என்னவெனில், பிரதேச ஒருமைப்பாடு ஆகும். ஆனபடியால் தான் சிங்கள ஆதிக்கவாதிகள் பிரதேச ஒருமைப்பாட்டை ஊடறுப்பதில் கண்ணுங் கருத்துமாக உள்ளனர். இந்த வகையில் தமிழ் ஈழ மக்களின் மிகப் பெருமளவு சனத்தொகை வாழ்கின்ற தலையாய பகுதியான குடாநாட்டையும் ஏனைய பகுதியையும் பிரிக்கும் ஓர் ஆப்பாக ஆனையிறவு இராணுவத்தளம் அமைக்கப்பட்டது.

குடாநாட்டிற்கும் வன்னிக்கும் இடையிலான ஒருங்கிணைப்பை வடபகுதியில் தடுத்து நின்ற இறுதி இராணுவ தளம் ஆனையிறவே ஆகும். எனவே ஆனையிறவு இராணுவ தளம்மீதான தாக்குதலானது பிரதேச ஒருமைப்பாட்டை தடுத்து நிறுத்தும் எதிரியின் பெரும்திட்டத்தை முறியடிக்கும் ஒரு பெரும் முயற்சியே ஆகும். இம்முகாம் வெற்றிகொள்ளப்படுமிடத்து வடபகுதியில் பிரதேச ஒருமைப்பாட்டுக்கான இறுதித் தடை முற்றுமுழுவதுமாக நீங்கிவிடும் என்றே கூறலாம். இதன்பின்பு வட பகுதியில் பலாலி, காரைநகர் போன்ற முகாம்கள் இருந்தாலும் கூட அவை பிரதேச ஒருமைப்பாட்டை தடுக்க வல்லவை அல்ல. ஆதலால் அளவால் பெரிய பலாலி இராணுவ முகாமையும் காரைநகர் கடற்படை முகாமையும்விட ஆனையிறவு தளம் பிரதேச ஒருமைப்பாடு என்ற வகையில் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததென்றே கூறலாம்.

இதுவரை நிகழ்ந்த தாக்குதல்களுள் அளவால் பெரியது இத்தாக்குதலே. உள்ளூர் தயாரிப்பான ஒரு கைத்துப்பாக்கியுடன் ஆரம்பமான விடுதலைப் போராட்டம் இன்று எதிரியின் ஒரு பெரும் இராணுவ முகாமை தாக்கும் தரத்துக்கு உயர்ந்து இரு அரசுகளுக்கிடையிலான ஒரு யுத்தம்போல் உருவெடுத்துள்ளது. தாக்குதல் தொடங்கி பல நாட்கள் கழிந்தும் எதிரியால் தன்னை ஸ்திரப்படுத்த முடியாமல் இருப்பது முதல்வெற்றியாகும். தமிழீழப் போராட்டத்தை ஒரு பரிகாசத்துக்குரியதாகவே தான் எடுத்துக்கொள்வதாக கூறிய ஜே. ஆருக்கும், அவர் தம் சிங்கள ஆதிக்கவாதிகளுக்கும் இது ஓர் உன்னத பாடத்தை கற்பித்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. எதிரியின் பெரும் முகாமுக்கெதிராக ஒரு பெரும் தாக்குதலை ஆரம்பித்ததென்பதே தேசிய விடுதலைப் போராட்டம் என்றவகையில் ஒரு பெரும் வெற்றியாகும்.

பல்வகை முயற்சியின் மத்தியில் என்றோ ஒருநாள் இத்தளம் வீழும் என்பதில் சந்தேகமில்லை.

- சாரணன் -

# மாணவர் செய்தவை



கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய, உயர்தர மாணவர் மன்றத்தின் 3வது மலரான திவ்யம் நூல் கிடைக்கப் பெற்றோம். 1990 ம் ஆண்டு வெளியிடப்பட வேண்டிய இக் கையெழுத்துப் பிரதி காலதாமதமாகி 1991ம் ஆண்டு நடுப்பகுதியிலேயே வெளிவந்தது

பதிப்புக்குழுவின் சார்பில் செய்தி வெளியிட்டுள்ள திரு. செ. விந்தன் கீழ்கண்டவாறு எழுதியுள்ளார்.

'கல்வியின் நோக்கம் மானுடம் வெல்லல்,

"......... இதுவே எமது அசைக்க முடியாத நம்பிக்கை என்றோ ஓர் நாள் மானுடம் வெல்லும் என்ற நம்பிக்கை. ஒளியைத் தேடி ஓடி இந்த சஞ்சிகை வெளிக் கொணர்கிறோம்.

மாணவர்களின் ஆக்கங்களைக் கொண்ட 100 பக்கங்களான இம்மலர் செல்வன் கனகரட்ணம் குமாரச்சந்திரன் (வள்ளல்) அவனுக்கு காணிக்கையாக்கப்பட்டுள்ளது. 28-03-1991 ல் மண்ணில் விதைக்கப்பட்ட இவ் வீரமகன் இம் மலரின் முதல் இரு இதழ்களையும் வெளிகொணர காரணமாய் இருந்துள்ளான்.

இம் மலர் தாங்கியுள்ள 38 விடயதானங்களில் கவிதை சிறுகதை, அறிவியற் கட்டுரை ஆகியவை உள்ளடங்கியுள்ளன. கவிதைகளும், சிறு கதைகளும் பாடசாலை மாணவர்கள் வாழும் சூழலைப் பிரதிபலிக்கின்றன. பெருமளவு கவிதைகளும், சிறு கதைகளும் ஏழ்மையையும். மாணவ அறவொழுக்க அவசியத்தையுமே தமது கருப்பொருளாக கொண்டுள்ளன. அதேவேளை தேசிய பிரச்சனையாக இன்று அரசியல் முனைப்புக் கொண்டுள்ள தமிழீழ போரரையும், தேசிய அவாவையும் கருப்பொருளாக கொண்டுள்ள ஆக்கங்களும் உள்ளன.

காதலையும், சகோதர பாசத்தையும் இவை கைவிடவில்லை. ஆனால் அறிவியற் தேடல்களையும், பிரதேச நிலமைக்கு அவசியமான அறிவியற் கருத்துக்களையும், கல்வி அமைப்பால் மாணவர்களும், ஆசிரியர்களும் முகங்கொடுக்கும் பிரச்சனைகளையும் கருப்பொருளாக கொண்ட படைப்புகள் மிக சொற்பமாக இருத்தல் ஒரு குறைபாடேயாகும். 90 கலைப்பிரிவு தி. ஜெயராணியால் எழுதப்பட்ட கல்வியின் நோக்கு என்ற கட்டுரையும் மாணவர்கள் கடமை என்ற கட்டுரையும் (எழுதியவர் பெயர் இல்லை) பெண்களுக்கு உயர்கல்வி அவசியம் என்ற கட்டுரையும் கல்வி தொடர்பான கட்டுரைகளாகும் முன்னைய இரு கட்டுரைகளும் மாணவர்கள் எவ்விதம் நடந்து கொள்ள வேண்டும் என்பதை கூறவருகின்றன. இது அவசியந்தான். ஆனால் தற்போதைய கல்வி அமைப்பும் கல்வி தொடர்பான நடைமுறைகளும் மாணவர்களை இப்படித்தான் நட என நிர் பந்திக்கின்றது. அதை மாணவனால் மீற முடியாதுமுள்ளது இந்தப் பிரச்சனையை தீர்ப்பது எப்படி? இந்த விவகாரத்தை இக்கட்டுரைகள் தொடவேயில்லை.

அசிரியர்கள் மாணவர்களின் அறிவியல் தேடல் பார்வையை மேலும் ஊக்கப்படுத்தி, நெறிப்படுத்துவார்களானால் இன்னும் திறமான படைப்புகளை மாணவர்கள் வெளிக் கொணர்வார்கள். "வில்லுப் பாட்டு தோன்றிய கதை" என்ற கட்டுரையில் வருவது போன்ற துருவிப் பார்க்கும் பார்வை அனைத்து விடயங்களிலும் அவசியம்.

இம் மலரில் வந்த ஆக்கங்களில் சிற்சில பகுதிகளை இங்கே குறிப்பிடுவது பொருந்தும்.

சி. விஜயா கலை மாணவி கூறுகிறாள்

"ஓ!"
பெண் வர்க்கமே
அக்கால மாமியார் பார்ப்பது
பெண்ணின் நற்குணங்கள்.
ஆனால்
இக்கால மாமியார் பார்ப்பது
பெண் கொண்டுவரும் நான் கெழுத்துக்கள்"

மு. கிருஷ்ணகுமார் 90, அறிவியல் மாணவன் எழுதுகிறான்

"காவல் என்ற போர்வையில் நம்மண்ணை
அரக்கர்கள் அரவணைக்கும்
போதிலே - மறவர் படையாம்
உன் தமிழினத் தாயின் தவப் புதல்வர்கள்,
இங்கே வீரமுடன் வேங்கைகளாய் மண் மீட்க,
போரிட்டு மடிகிறார்கள்" .....
"காதல் காதல் எண்ணமெல்லாம் மெய்தவழ
இங்கே மேய்ச்சலிட வேண்டிய இளம் வயதில்
முற்றும் திறந்த முனிவரைப்போல் ...
செத்தவனை நீ கொஞ்சம் நாட்டுக்காய்ச்
சிந்தனைசெய்"

இறுதியாக விடுதலைப் பாதையில் - உன்
பங்கு பணி எவ்வளவு
மலரப் போகும் புதிய பூமியில் - நீ
தலை நிமிர்ந்து நிற்க - என்ன தகைமை உண்டு
மாணவனே நீ சிந்தனை செய்!!

ஆ. பங்கயற்செல்வி 'சிரிப்பு' என மகுடமிடப்பட்ட கவிதையில் பின்வருமாறு கூறுகிறார்.

''பொறுப்புள்ள மனிதரெல்லாம் ஏனோ புாவம்
சிரிப்பென்றால் சிணுங்குகின்றார் சீறுகிறார்
எரிப்பது போல் பார்க்கின்றார் என்ன செய்வோம்
''ஏனய்யா சிரிக்கவில்லை''? என்று கேட்டால்
எளியவரைப் பார்த்து நாம் இறித்து விட்டால்
ஏறிவிட்ட எம்மதிப்பு என்னவாகும்?
ஏழைகளைப் பார்த்து நாம் நகைத்துவிட்டால்
எத்தனையோ இடையூறு ஒரு நூறுண்டென்பர்.''

நாயும், நரியும்; நல்மாடும் நற்குதிரையும்; நண்டும் சிப்பியும் சிரிப்பை எவ்விதம் காட்டுகிறது என்பதைக் கூறிய பங்கயற்செல்வி தொடர்கிறார்,

''நாமென்ன இதைவிடவா கெட்டுப் போனோம்
நாளை முதல் சிறிதேனும் முயற்சி செய்வோம்
நாளாக நாளாக நாம் சிரிப்போம்''...

மேலும்,

''சிரிப்பினால் சிந்தனை விரிவதுண்டாம்
சிரிப்பினால் சாந்தியும் வருவதுண்டாம்
சிரிப்பில் நிம்மதி தெரிவதுண்டாம்
சிரிப்பினால் நிம்மதி தெரிவதுண்டாம்''.

என்று கூறி பின்வருமாறு முடிக்கிறார்.

''சிரிக்காத பேருக்கு பல்லெதற்கு
சிரிக்காத பெரியோர்க்கு முகமெதற்கு''

சஞ்சுதன் தனது காதல் உணர்வுகளை பின்வரும் வரிகளில் சுருக்கமாக அடக்குகிறார்,

''நான் கவிழ்ந்து
படுப்பதில்லை...
இப்போதெல்லாம்...
ஏனென்றால்...
நெஞ்சிலிருக்கும்
நீ
நொந்துவிடக் கூடாது
என்பதால்!''

நா. சிறிதரன், 89 வர்த்தகப்பிரிவு மாணவன் ஒரு பெண்ணால் ஏமாற்றப்பட்ட வேதனையை மிக அழகாகவும் சூட்சுமமாகவும் சித்தரிக்கின்றான்.

''மீண்டும் ஏமாற்ற முடியாது - நீ
கவரப் போவதை
கனவில் தீர்க்கமாய்
கண்டுவிட்டேன்,
ஆகாயமாக நான் இருக்க - நீ
ஓர் நிலவு
நான் ஏற்படுத்தும் மின்னல்கள்
உன்னை மட்டுமல்ல
விண் மீன்களையும் அச்சுறுத்தும்
இவை நிகழமுன்
ஏமாற்ற தகுதிகளைக் களைந்து விட்டு
வெற்றுணர்வுடன் - திரும்பி
நடைபயிலு'',

நா. அனுசியா, என்ற 90 விஞ்ஞான மாணவி ஏழ்மைபற்றி ஒரு கவிதை பாடியுள்ளார்.

''அரங்கம் நெரிசலின் மத்தியில் - நிறைந்தது
உடை கிழிசலின் தோற்றத்தில் - ஓர் உருவம்
மேடையை நோக்கி நடைபயில - இடைநடுவில்
கைகள் மறித்து கண்டித்தது...
காயக் கொலுசும் அணிவிக்கப்பட்டது.

தொடர்கிறான்,

நேரமும் நிகழ்ச்சி
நேரத்தை
கடந்து செல்ல
நூல் வெளியீட்டு
நபர்களில் — நூலாசிரியனை
காணவில்லை — அக்கவிஞன்
எங்கே — என்ற வினா
அரங்கம் - முழுதும் அதிர்ந்தது.

அவ்வதிர்வால் — அதிர்ந்த
கவிஞன் — தள்ளாட்ட
முகத்தடன்
இதய காயம்
கண்ணுணரும் — வண்ணம்
மேடையை — நோக்கி
வருகிறான்......

K. றஞ்சினி ஆண்டு 13 வர்த்தக மாணவி கவிதை பற்றி இவ்விதம் கூறுகிறாள்.


''துடிப்பின் ஒளியிலே
நெளியும் சர்ப்பங்கள்
கவிதைகள்!.''

மாணவர்களிடையே மிக நெறிப்படுத்தி வளர்த்தெடுக்கப்படவேண்டிய சிந்தனையாற்றலும், படைப்பாற்றலும் நிறையவே உண்டு என்பதற்கு திவ்யம் ஒரு சாதாரண எடுத்துக்காட்டாய் அமைகிறது உங்கள் தரமான படைப்புக்களை ஜனரஞ்சகப் படுத்துவதில் நாம் பெருமை கொள்கிறோம்.

உங்களால் படைக்கப்பட்டவைகளை அனுப்பக் கோருகின்றோம்.

● உருவகக்கதை

# மீட்சி



இதற்கு மேல் அவைகளால் பொறுக்க முடியாது போய்விட்டது.

நாளொரு எலியாய் பூனைக்கு அனுப்பி வந்ததில் பூனையின் குடும்பம் பெருகித்தான் போய்விட்டது.

எலிகளின் எண்ணிக்கை குறைவடைந்து கொண்டிருக்கும் வேளையில், பூனை இப்பொழுது புதிதான வேண்டுகோள் என்ற பெயரில் அதிகார ஆணையொன்றிட்டது.

'செம்பியன் செல்வன்'

''எனது குடும்பம் பெருகிவிட்டது. அதனால் நீங்களாக அனுப்பும் 'நாளொரு எலி'த் திட்டம் எங்களது உணவுத்தேவையைப் பூர்த்தி செய்ய இயலாத காரணத்தால் அது இன்றோடு காலாவதியாகிறது. நாங்கள் உயிர்வாழ்வதற்காக நீங்கள்இனி நாளொன்றிற்கு இரு எலிகளையாவது எங்களுக்குப் பலியாக்கவேண்டும்.''

இளைய எலிகள் சீற்றம் மிகக்கொண்டன.

மூத்த எலிகள் இதுபற்றி ஆலோசிக்க அவசரக் கூட்டம் கூடின.

## 2

கூட்டம் ஆரம்பத்திலேயே அமளிதுமளிப்பட்டது.

''இதுவரை எம்மினத்தைப் பலிகொடுத்து அழித்து வந்தது போதாதா...? இன்னும் தொடர்ந்து... ஒன்றுக்கு இரண்டாக... இது அநியாயம்... அக்கிரமம்...'' இளைய எலிகள் கூக்குரலிட்டன.

மூத்த எலிகள் தங்கள் சுயகௌரவம் பாதிக்கப்பட்டது என்ற நினைப்பில், ''அப்படி நாங்கள் விட்டுக் கொடுத்தால்தான் இந்தளவு எண்ணிக்கையிலாவது நீங்கள் இந்த இடத்தில்... சுதந்திரமாக உயிரோடு ஓடித் திரிய முடிகிறது... இளரத்தக்காரர் உங்களுக்கு இது புரியாது'' என்று பெருமிதத்துடன் பேசின.

''வெட்கம்... வெட்கம்... கேவலம்... சுதந்திரமாம்... சொந்த இடமாம்... இந்த வார்த்தைகளை உச்சரிக்க அடிமைகளான உங்களுக்கு என்ன உரிமையிருக்கிறது. நீங்கள் விட்டபிழைகளால் நாங்கள்தான் அல்லல் பட்டுக்கொண்டிருக்கிறோம்...''

''நாங்கள் விட்ட பிழை என்ன?...''

''எங்களைப் பலியிடச் சம்மதம் கொடுத்தது பிழையில்லாமல் மகத்தான சரியா?—''

''எந்தக்கட்டத்தில் இதற்கு உடன்பட்டோமென்று புரியாமல்...''

''அதைத்தான் சற்று விளக்குங்களேன்...'' சபையில் ஒரு குரல் எழுந்தது.

''அப்படிக்கேட்டால் சொல்லுகிறோம்... அன்று பூனை தன்னிஷ்டப்படி தாறுமாறாக நாளொன்றுக்கு ஐந்து பத்து என்று எலிகளைக் கொன்றுகுவிக்க...''

என்ற பேச்சை இன்னொரு குரல் வெட்டியது.

''அந்த நிலையில் நீங்கள் எடுத்த நடவடிக்கை என்ன?''

''பூனை வரும்பொழுது நாம்தப்பிச்சென்று ஓடி ஒளிக்க வசதியாக, அதன் கழுத்தில் ஒரு மணியைக் கட்டிவிடுவது என்று முடிவெடுத்தோம்'' என்று கூறிமுடிக்குமுன்பே ஏளனக்குரல் ஒலி வளையை நிறைத்தது.

''பூனைக்கு மணி கட்டினீர்களா...''?

''யாரும் கட்ட முன்வரவில்லை... பூனைக்கு யார் மணிகட்டுவது என்று பின்புதான் உணர்ந்தோம், அதன் விளைவால்தான் இந்த ஒப்பந்தம் கைச்சாத்தாயிற்று...''

''இந்த ஒப்பந்தம் எம் இன ஒழிப்புக்கானது என்று உங்களுக்குப் புரியவில்லையா? இது சற்று கால தாமதமானாலும், பூனை தான் இருந்த இடத்திலிருந்துகொண்டே நம்மவர்களை அழிக்க எடுக்கும் சதிக்கு நீங்கள் உடந்தையாகிவிட்டதை உணரவில்லையா?''

மூத்த எலிகள் மௌனித்தன. அவர்களின் ரோஷம் தூண்டிவிடப்பட்டது.

''இவ்வளவு கதைக்கும் நீங்கள் மட்டும் பூனைக்கு மணிகட்டிவிடுவீர்களா...?''

எங்கும் மௌனம் சூழ்ந்தது.

மூத்த எலிகள் மடக்கிவிட்ட பாவனையில் சுற்றுமுற்றும் பார்த்தன.

மௌனத்தை கிழித்துக்கொண்டு பதில்வந்தது.

''நாங்கள் பூனையின் கழுத்தில் மணிகட்டமாட்டோம். எங்கள் கழுத்தில் கட்டிக்கொள்வோம். பிரச்சினைகளை ஏன் ஒரேபாதையில் பார்க்கவேண்டும். வேறும்பல வழிகள் உள்ளன...''

மூத்த பூனைகள் வாய்விட்டுச் சிரிக்கலாயின,

''சிரிக்காதீர்கள் எங்கள் கழுத்தில் மணியிருக்குமானால் பூனை துரத்தும்போது நாம் ஓடும் ஒலி பூனையை மருளச் செய்யும்... அதன் இலக்கை பிழைபடச் செய்யும்... நாம்தப்பிவிடலாம்... அல்லது ஒரு எலியைத்துரத்தும்போது... பூனையின் பின்னால் எல்லா எலிகளும் ஒன்றுசேர்ந்து பாயும்பொழுது மணியின் ஒலி... எங்களது ஒருமித்த தாக்குதல் எல்லாம் சேர்ந்து பூனையையே நாம் கடித்துக்குதறிவிடக் கூடியதாகி விடும்...''

''அதுமட்டுமல்ல...''

''நாமே அதன் குட்டிகள் உள்ள இடத்தைத் தேடிச்சென்று இதே தாக்குதலை ஆரம்பித்தால்...''

''பூனைகள் நம் எல்லையைவிட்டே ஓடும்...'' என்று எலிகள் மகிழ்ச்சியால் கத்தின.

மூத்த எலிகள் இருந்த இடம் காலியாக இருந்தது.

# நுண்ணறிவுப் போட்டி - 2

**கதவு - 1 காற்றலை - 3**

அடைப்புக் குறிக்குள் வரும் இரு விடயங்களிலும் எது சரியோ அதன் கீழ் கோடிடவும். இரண்டுமே தவறானால் உங்கள் பதிலை எழுதி அக்கூற்றை நிறைவு செய்யவும். அனைத்துக் கேள்விகளுக்குமான பதிலை எழுத முடியாவிட்டாலும், முடிந்தளவு கேள்விக்கான பதில்களை எழுதி அனுப்பவும்.

1) ஒரு நாட்டின் தேசிய பொருளாதாரத்தைக் கட்டி வளர்க்கும் போது கவனம் செலுத்தப்பட வேண்டிய பிரதான அம்சம் (அந்நாடடு மக்களின் தனிநபர் வருமான அதிகரிப்பு / மொத்த தேசிய வருமான அதிகரிப்பு.)

2) கலை மாணவனுக்கும் அறிவியல் (விஞ்ஞான) மாணவனுக்கும் இடையேயான வேறுபாடு (கலை மாணவனுக்கு அறிவியல் கண்ணோட்டம் இருக்காது. அறிவியல் மாணவனுக்கு அறிவியல் கண்ணோட்டம் இருக்கும். / கலை மாணவன் பரிசோதனைகள் மூலம் நிரூபிக்க முடியாததைக் கற்கிறான், அறிவியல் மாணவன் பரிசோதனைகள் மூலம் நிரூபிக்க கூடியதைக் கற்கிறான்.

3) ஒரு பள்ளிக்கூட அதிபர் (சிறந்த ஓர் நிர்வாகியாய் இருந்தால் போதுமானது/ சிறந்த ஓர் ஆசிரியராய் இருக்க வேண்டியது அவசியம்)

4) ஒருவன் அறிஞன் என்பதற்கான எடுத்துக்காட்டு (அவன் வைத்திருக்கும் கல்வித் தகைமைச் சான்றிதழ்கள/ சூழலுக்கு ஒப்ப தன்னை தகவமைத்துக் கொள்ளும் ஆற்றல்.)

5) தமிழர் போற்றிப் பேண வேண்டியது (தமது பாரம்பரிய பண்பாட்டை / தமது மரபுவழி நாகரிகத்தை.)

6) ''தந்தையிடம் நீ அறிவை வாங்கலாம், தாயிடம் நீ அன்பை வாங்கலாம்'' என்ற இந்த கவிதை வரிகள் (ஆண் பெண் இரு பாலாருக்கும் இடையே நிலவ வேண்டிய சமூக, தொழில் பாகுபாட்டை சாயாக எடுத்துக்கூறுகிறது/ ஆண் மேலாதிக்கத்தை அழகாக வலியுறுத்துகின்றது )

7) இந்துக் கோவில்களில் வருடா வருடம் நடைபெறும் சூரன்போர் (மிகப் பண்டைய வரலாற்றின் ஆரிய மேலாதிக்கத்தின் குறியீடேயாகும்/ பண்டைய வரலாற்றுடன் எந்த வித தொடர்புமற்ற ஒரு பண்டைய நீதிக்கதை மாத்திரமேயாகும்.)

8) இன்று தமிழீழ மண்ணில் ஆண்களின் எண்ணிக்கை பெண்களினதையும் விட குறைந்து செல்கிறது. இப்பிரச்சனைக்கான சமூகத்தீர்வு (நிலவும் ஒரு தாரமண முறை தளர்த்தப்பட வேண்டும்./ இது மாற்று நடவடிக்கை எதுவுமே எடுக்கப்பட முடியாத ஒரு இயற்கை நியதி என்று கருதி வாழாதிருத்தல் வேண்டும்.

9) சிவபெருமான் தன் உடலில் பாதியாக உமாதேவியாரை வைத்திருக்கிறார், என இந்துமதம் கூறுவது (ஆணும் பெண்ணும் சம உரிமை உள்ளவர்கள் என்பதைத் எடுத்துக் காட்ட/ மனைவி கணவனின் ஒரு பாதி என்ற ஆண் மேலாதிக்க வாதத்திற்கு உருவம் கொடுக்க.)

10) படிப்பை இடையில் குழப்பிக் கொண்டு பள்ளிக்கூடத்தைவிட்டு விலகுவோரின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கிறது. இதற்கான காரணம் (மாணவர்களும், பெற்றோர்களுமேயாகும்/ கல்வி அமைப்பே இதற்கான அடிப்படைக் காரணியாகும்.)

குறிப்பு:-


1991 செப்ரம்பர் 15க்குமுன்பாக இதற்கான விடைகளை அனுப்ப வேண்டும்.

## தமிழர் பாரம்பரிய....

( 13ஆம் பக்கத் தொடர்ச்சி.)

தின் பொருளாதார செயற்பாடுகளிலும் ஈடுபட்டுக் கற்றுவந்தனர். குருவுடன் இணைந்து செயன்முறைப் பயிற்சிகளைப் பெறுவதற்கு பெருமளவு நேரம் வேண்டப்பட்டமையால் குருவின் இல்லத்தில் வாழ்தல் அனுகூலமாக அமைந்தது குருவுடன் சேர்ந்து கச்சேரிகளுக்குச் சென்றமையால் உரிய மேடை அனுபவங்களை மாணவர்கள் பெறமுடிந்தது. மருத்துவக் கல்வியைப் பொறுத்தவரை குருவோடு வாழ்ந்து பயிற்சி பெறல் இன்றியமையாததாகக் காணப்பட்டது.

''சங்கம்'' என்பது அரசர்களின் அரவணைப்பிலே இயங்கிய உயர்கல்வி நிறுவனமாகும். தமிழ்ப்பாரம்பரியத்திலே முகிழ்த்த பல்கலைக்கழகமாக இது அமைந்தது. அரசர்களின் வலுவும் நலிவும் இக் கல்வி நிலையங்களை நேரடியாகத் தாக்கின். அறிவுத்துறைகளில் ஆழ்ந்த புலமை கொண்டோர் சங்கத்திலே ஒன்று கூடினர் ஆழ்ந்த மெய்யியற் கருத்துக்கள் அங்கு பரிசீலனையும் மறு பரிசீலனையும் செய்யப்பட்டன பல்வேறு துறைகளில் நூலாக்கமும் நூல் மதிப்பீடுகளும் நிகழ்ந்தன சங்கத்து உறுப்பினர் ''சான்றோர்'' எனப்பட்டனர். அரசர்களே சங்கத்தின் தவிசாளராக இருந்தனர். நல்லூரிலே சங்கம் இருந்தமைக்கும் அதனோடு இணைந்த ''சரஸ்வதி மகா ஆலயம்'' என்ற சுவடியகம் இருந்தமைக்கும் சான்றுகள் உள்ளன.




இடமிருந்து வலம்

1. தற்போதைய தமிழ் மொழியின் எழுத்து வடிவத்தின் நேர் முந்திய எழுத்து வடிவம் இவ்விதமே அழைக்கப்பட்டது.

2. மும் மணிகளில் இது கடைசி மணி.

3. இந்த வகைச் சேட்டிற்கு அநேகமாக அரைக்கையே வைப்பார்கள்.

5. மலையகத் தமிழரிடையே வழக்கிலிருக்கும் ஒரு ஆண்பால் பெயர்.

7. ஆரம்ப நாட்களில் இலங்கையில் சீலைப்புடவை தலையில் சுமந்து விற்ற அந்நிய நாட்டவர் பட்டுக்கும் இவ் அந்நிய நாட்டவர்க்கும் நிறைய தொடர்புண்டு. சொல் வலம் இடமாக அமைந்துள்ளது.

9. சோழ மன்னனால் மரணதண்டனை விதிக்கப்பட்ட கவிஞனின் தந்தையான இவன் ஒரு கவிச் சக்கரவர்த்தி.

10. நீராவியைக் கொண்டு இதை இயக்க கண்டு பிடித்ததுடன் மனித வரலாறு திடீர் என்று முன்னோக்கிப் பாய்ந்தது.

11. சாதனைவீரர்களின் பட்டியல் வலம் இடமாக இருக்கிறது.

...சியர்களின் உணவின் ஒரு அத்தியாவசிய வடிவம் வலம் இடமாக நிற்கிறது.

17. கண்ணன் திருடித்தின்றதாகக் கூறப்படும் பொருள் இதைக் கடைந்தே பெறப்படுகிறது.

18. இதைப் பூட்டினால் வண்டில் துரிதமாக ஓடும். இது எழுத்துச் சிதறி காணப்படுகின்றது.

மேலிருந்து கீழ்

1. பார்த்திபனின் தேரோட்டி ஓர் எழுத்து இழந்து நிற்கிறார்.

2. இரத்தம் இவ்விதந்தான் பெருக்கெடுத்து ஓடும்

4. தொல்லியல் ஆய்வாளர்கள் பண்டைக்கால வரலாற்றை ஆய்வு செய்வதற்கு இதை ஒரு நம்பிக்கையான சான்றாக பயன்படுத்துகிறார்கள். கடைசி எழுத்து இங்கு விடப்பட்டுள்ளது.

6. இலங்கையில் சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட வேண்டும் என விதந்துரைத்த ஆணைக்குழு தனது முன் சொல்லை இழந்து நிற்கிறது.

7. ஒரு தனித்துவமான இன-மதக்குழுவான இவர்கள் இந்தியாவில் தனிநாடு கேட்டுப் போராடி வருகிறார்கள்.

8. தென் இந்தியாவின் பண்டைய பெயர்.

12. சுற்றுலா, பயணம் போன்ற சொற்களுடன் ஒத்த மற்றோர் சொற்பதம்,

13. பெண்களின் இந்த ஆபரணம் ஒரு காப்பியத்தையே படைத்து விட்டது.

14. பெண்களின் தலைமுடி காற்றுக்குப் பறக்காமல் வாரிக்கட்ட பயன்படுத்தும் ஒரு பொருளின் ஆங்கிலப்பதம்.

16. இராமனால் 'தோழா' என விழிக்கப்பட்ட படகோட்டி.

# ஓவியம் வாக்கியம்



இந்த ஓவியத்தை சற்றுநேரம்
உற்றுப்பாருங்கள்
பார்த்துவிட்டீர்களா?
மனதில் ஏதாவது ஒரு கரு
தோன்றியிருக்கவேண்டுமே!
சரி,
அதை வாக்கியமாகவோ
கவிதை வரிகளாகவோ
எமக்கு எழுதியனுப்புங்கள்
பரிசு உண்டு.